தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 03.07.2013

### அதிக உற்பத்தி செய்த விவசாயிகளுக்கு பரிசு

மாவட்ட அளவில் அதிக உற்பத்தி செய்த விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சியர் ந.வெங்கடாசலம் திங்கள்கிழமை பரிசு வழங்கி பாராட்டினார்.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது. இதில் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றித் தரக்கோரி 332 பேர் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர். மேலும் இந்தக் கூட்டத்தில் அதிக விளைச்சல் போட்டியில் வெற்றி பெற்ற விவசாயிகளுக்கு ஆட்சியர் பரிசு வழங்கினார்.

மாவட்ட வேளாண்மைத் துறை சார்பில் நடத்தப்பட்ட இந்த பயிர் விளைச்சல் போட்டியில், இறவை சாகுபடி முறையில் ஏக்கருக்கு 8,875 கிலோ உற்பத்தி செய்த வேடசந்தூர் விவசாயி கே.லிங்கப்பன் முதல் பரிசினை பெற்றார். 7,750 கிலோ உற்பத்தி செய்த அதேபகுதியைச் சேர்ந்த டி.வி.பெருமாள் என்பவருக்கு 2 ஆம் பரிசு வழங்கப்பட்டது. முதல் பரிசாக ரூ.15ஆயிரம், 2 ஆம் பரிசாக ரூ.10 ஆயிரத்தினையும் ஆட்சியர் ந.வெங்கடசாலம் வழங்கினார். அதேபோல் மாற்றுத் திறனாளிகள் சார்பில் வழங்கப்பட்ட 6 மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் ஜேம்ஸ் ரவிக்கு, ஆட்சியர் உத்தரவிட்டார்.

### கல்லூரியில் படிக்கும் விவசாயிகளின் மகன்களுக்கு கல்வி உதவித் தொகை

கல்லூரியில் பயிலும் விவசாயிகளின் மகன்களுக்கு சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கழ் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருவதாக சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வே. ராஜாராமன் தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டம், வள்ளநேரியில் அம்மா திட்ட முகாம், செங்குளத்தில் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கம், அங்கன்வாடி குழந்தைகள் மையம், சாத்தரசன்கோட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஆகிய இடங்களில் ஆட்சியர் செவ்வாய்கிழமை திடீர் ஆய்வு செய்தார்.

வள்ளநேரி ஊராட்சி கூத்தாண்டவன் கிராமம் சமுதாயக்கூடத்தில் நடைபெற்ற அம்மா திட்ட முகாமில் பயனாளிகளிடம் இருந்து பெறப்பட்ட மனுக்களை ஆய்வு செய்த ஆட்சியர், உழவர் பாதுகாப்பு அட்டை பெற்றுள்ள விவசாயிகளின் மகன் அல்லது மகள் கல்லூரியில் பயின்றால் அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. உழவர் பாதுகாப்பு அட்டை இல்லாத விவசாயிகள் இத்திட்டத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். சிறு, குறு விவசாயிகளுக்கான சான்றிதழ்களை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என துணை வட்டாட்சியருக்கு உத்தரவிட்டார்.

மனு அளிக்க வந்திருந்த பொதுமக்களிடமும் விவசாயிகளாக இருந்தால் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

பின்னர் செங்குளத்தில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தை ஆய்வு செய்த ஆட்சியர், உரம் இருப்பு மற்றும் விலைப்பட்டியலில் தகவல் இல்லாததைக் கண்டு சம்பந்தப்பட்ட அலுவலரைக் கண்டித்தார்.

**லோயர் நீராறில் 42 மி.மீ. மழை**

லோயர் நீராறு அணைப் பகுதியில் செவ்வாய்க்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக 42 மி.மீ. மழை பெய்துள்ளது,

பிற இடங்களில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீ.யில்): சின்கோனா 33, சோலையாறு 34, பரம்பிக்குளம் 12, அப்பர் நீராறு 32, வால்பாறை 20, தூணக்கடவு 5, பெருவாரிப்பள்ளம் 8, வேட்டைக்காரன்புதூர் 1.4.

**வறட்சி பாதித்த விவசாயிகளுக்கு ரூ. 31 லட்சம் வறட்சி நிவாரண நிதி**

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண நிதி வழங்கும் நிகழ்ச்சி கொடுவாயில் திங்கள்கிழமை நடைபெற்றது. கூட்டுறவு வங்கித் தலைவர் எஸ்.பி.லோகநாதன் தலைமை வகித்தார். ஊராட்சித் தலைவர் சுலோச்சனா மதி, ஒன்றிய கவுன்சிலர் ரேணுகா முருகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வங்கியின் தனி அலுவலர் மாணிக்கவாசகம் வரவேற்றார்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட 668 விவசாயிகளுக்கு ரூ. 31.60 லட்சத்தை, பல்லடம் எம்எல்ஏ கே.பி.பரமசிவம், திருப்பூர் மாவட்ட ஊராட்சித் தலைவர் எம்.சண்முகம், பொங்கலூர் ஒன்றியத் தலைவர் எஸ்.சிவாசலம் ஆகியோர் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய கூட்டுறவு வங்கித் தலைவர் எஸ்.பி.லோகநாதன், நலிவடைந்த கொடுவாய் கூட்டுறவு வங்கிக்கு ரூ. 40 லட்சம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இந்நிகழ்ச்சியில் கொங்கு வேளாள கவுண்டர் பேரவை மாநிலத் தலைவர் பொங்கலூர் இரா.மணிகண்டன், வங்கியின் துணைத் தலைவர் விஸ்வநாதன், கூட்டுறவு வங்கித் தலைவர்கள் எம்.கே.சுப்பிரமணியம், மணி (எ) சுப்பிரமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டார்கள். வங்கியின் செயலாளர் நல்லசிவம் நன்றி கூறினார்.

**கோபி வேளாண் கூட்டுறவுச் சங்கத்தில் விதை நெல் விற்பனை தொடக்கம்**

கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் விதை நெல் விற்பனை துவங்கப்பட்டுள்ளது.

ஜூன் 28-ஆம் தேதி கொடிவேரி அணையிலிருந்து தடப்பள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்கால்களில் பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இதையடுத்து, நாற்றங்கால் தயாரிக்கும் பணியில்

விவசாயிகள் தீவிரமாக உள்ளனர். இதற்காக நிலத்தை உழவு செய்து, பண்படுத்தும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கோவைக்கு அடுத்ததாக தரமான விதை நெல்லை கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது. தாய் நெல்லை விவசாயிகளிடம் கொடுத்து, விளைவித்த பின் அந்த விதை நெல்லை கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தினர் வாங்கி, அவை விதை நெல்லாக விற்பனை செய்கின்றனர்.

தற்போது, கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் ஏ.எஸ்.டி.16 ரகம் 50 டன்னும், ஏ.டி.டி.45 ரகம் 25 டன்னும், ஏ.டி.டி.39 ரகம் 10 டன்னும், ஆந்திர பொன்னி 50 டன் என மொத்தமாக 135 டன் விதை நெல் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. ஏ.எஸ்.டி.16 ரக விதை நெல் கிலோ ரூ.37-க்கும், ஏ.டி.டி.45 ரகம் மற்றும் ஏ.டி.டி.39 ரகம் கிலோ ரூ.35-க்கும் விற்பனை செய்யப்படுகிறது. விவசாயிகள் இந்த விதை நெல்லை ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 60.79 அடி**

பவானிசாகர் அணை நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 60.79 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 1,448 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 900 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 7.51 டி.எம்.சி.

**மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம்**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் மழைநீர் சேகரிப்பு திட்டம் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் திருவண்ணாமலையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

ஒன்றியக் குழுத் தலைவர்கள் மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர்கள் பங்கேற்ற இக்கருத்தங்கை மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) வளர்மதி தொடங்கிவைத்தார்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் ஆர்.ஞானசேகரன், துணை நிலநீர் வல்லுநர் ஏ.ஜனகராஜ், உதவி பொறியாளர் பற்குணன், ஊராட்சிகள் உதவி இயக்குநர் செல்வகுமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்க வலியுறுத்தல்**

காய்ந்து போகும் நிலையில் உள்ள பணப் பயிர்களைக் காப்பாற்ற மேட்டூர் அணையில் இருந்து உடனடியாகத் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று பரமத்திவேலூர் வட்டத்திற்கு உள்பட்ட பொய்யேரி வாய்க்கால் பாசன விவசாயிகள் வலியுறுத்தினர்.

பரமத்திவேலூர் அருகேயுள்ள பொய்யேரி காளியம்மன் கோயில் வளாகத்தில் திங்கள்கிழமை பொய்யேரி வாய்க்கால் பாசன விவசாயிகளின் சங்கக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு பொருளாளர் பெரியசாமி தலைமை வகித்தார். தலைவர் முத்துசாமி, துணைத் தலைவர்கள் தன்டபாணி, கந்தசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். செயலாளர் முருகேசன் வரவேற்றுப் பேசினார்.

பிறகு, கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

கடந்த 5 மாதங்களாக காவிரியில் நீர்வரத்து இல்லாததால், ராஜா வாய்க்கால், பொய்யேரி வாய்க்கால், கொமாரபாளையம் வாய்க்கால்களை சார்ந்துள்ள விளை நிலங்களில் பயிர் செய்யப்பட்டுள்ள வெற்றிலை, வாழை, கரும்பு, கோரை உள்ளிட்ட பணப் பயிர்கள் காய்ந்து போகும் நிலையில் உள்ளன. நிலத்தடி நீரை நம்பியுள்ள பயிர்களுக்கு வறட்சியின் காரணமாக நிலத்தடி நீர் கிடைக்காமல் வாடி வருகிறது.

இந்தப் பயிர்களை காப்பாற்ற மேட்டூர் அணையில் இருந்து தமிழக அரசு பாசனத்திற்காக உடனடியாக தண்ணீர் திறக்க வேண்டும். காவிரியின் நீர்பிடிப்புப்

பகுதிகளில் பெய்து வரும் மழையால் மேட்டூர் அணைக்கு தற்பொழுது நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசு ராஜா, கொமாரபாளையம், பொய்யேரி வாய்க்கால்களை உடனடியாக தூர் வார வேண்டும். ராஜா வாய்க்காலில் இருந்து பொய்யேரி வாய்க்காலுக்கு பிரிந்து வரும் பகுதியில் கரைகள் உடைந்து இருப்பதால் பொய்யேரி வாய்க்காலுக்கு தண்ணீர் வர வாய்ப்பில்லை. எனவே, உடனடியாக கரையை சீர் செய்து உயர்த்திட வேண்டும்.

தண்ணீர் இல்லாததால் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் பயிர் செய்துள்ள பயிர்கள் கருகிய நிலையில் உள்ளன. கருகிய பயிர்களை கணக்கெடுத்து உடனடியாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.20 ஆயிரம் நிவாரணத் தொகையாக வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில், பொய்யேரி வாய்க்கால் பாசன விவசாயிகள் சங்க நிர்வாகிகள் மற்றும் 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். நிறைவில் துணைச் செயலாளர்

குணசேகரன் நன்றி கூறினார்.

**ரூ.19 லட்சத்துக்கு மஞ்சள் வர்த்தகம்**

நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மஞ்சள் ஏலத்தில் ரூ.19 லட்சத்திற்கு வர்த்தகம் நடைபெற்றது.

தமிழகத்தில் ஈரோட்டிற்கு அடுத்தபடியாக நாமகிரிப்பேட்டை பகுதியில்தான் மஞ்சல் அதிக விளைச்சலும், அதிக ஏல மண்டிகளும் உள்ளன. இங்குள்ள கூட்டுறவு வேளாண் விற்பனைச் சங்கத்தில் வாரம் தோறும் செவ்வாய்க்கிழமைகளில் மஞ்சள் ஏலம் நடைபெறும். நாமகிரிப்பேட்டை, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா, முள்ளுக்குறிச்சி உள்பட சுற்றுவட்டாரப்

பகுதி விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்த மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வருவர். இதில், மஞ்சள் வியாபாரிகளும், தனியார் நிறுவனத்தினரும் பங்கேற்று மஞ்சளை ஏலத்தில் எடுப்பர்.

கடந்த சில வாரங்களாக மஞ்சள் விலை தொடர்ந்து உயர்ந்து வந்தது. மூட்டை ரூ.10 ஆயிரத்தை தாண்டிய மஞ்சள் சில வாரங்களிலேயே ரூ.12 ஆயிரத்தைத் தொட்டது. கூட்டுறவு சங்கத்தில் அதிகபட்சமாக மூட்டை ரூ.11 ஆயிரத்து 750-க்கும், தனியார் மண்டிகளில் ரூ. 12 ஆயிரத்து 250 வரையும் விற்பனை செய்யப்பட்டது.

ஆனால், சில வாரங்களில் மஞ்சள் விலை ரூ.7 ஆயிரத்திற்கு குறைந்தது. கர்நாடகம், ஆந்திரம் உள்ளிட்ட வெளி மாநிலங்களில் இருந்து மஞ்சள் வரத்து அதிகரித்ததால் மேலும் விலை குறையும் என்று வியாபாரிகள் கவலையடைந்தனர்.

இதனால், ஈரோடு, சேலம் மஞ்சள் சந்தைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து சில வாரங்களாக நாமகிரிப்பேட்டை தனியார் மற்றும் கூட்டுறவு சங்கத்திலும் ஏலம் ரத்தானது. இதனையடுத்து, 3 வாரங்களுக்குப் பிறகு, சென்ற வாரம் மஞ்சள் ஏலம் நடந்தது. அப்போது விரலி ரகம், மூட்டை ரூ.8 ஆயிரத்தை தாண்டியது.

இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை நடந்த ஏலத்தில் விரலி ரகம் அதிகபட்சமாக ரூ. 8 ஆயிரத்து 899-க்கு விற்பனையானது. குறைந்தபட்சம் ரூ.6 ஆயிரத்து 899-க்கும் விலை போனது.

அதேபோன்று, குண்டு ரகம் மூட்டை அதிகபட்சமாக ரூ.7 ஆயிரத்து 219-க்கும் குறைந்தபட்சமாக ரூ.6 ஆயிரத்து 819-க்கும், பனங்காலி ரகம் அதிகபட்சமாக ரூ. 13 ஆயிரத்து 699-க்கும் குறைந்தபட்சமாக ரூ.8 ஆயிரத்து 499-க்கும் விற்பனையானது.

மொத்தம் 451 மூட்டைகள் மஞ்சள் வரப்பெற்று, ரூ.19 லட்சத்திற்கு வர்த்தகம் நடைபெற்றது.

**"மழை நீரை சேகரித்து நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த வேண்டும்**

மழை நீரை சேகரித்து நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த வேண்டும் என, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் வலியுறுத்தினார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் வீடுகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தி பராமரிப்பது குறித்த கருத்தரங்கு செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கருத்தரங்கை தொடக்கிவைத்து ஆட்சியர் டி.பி.ராஜேஷ் பேசியது:

பருவமழைக்கு முன்பு வீட்டுக் கூரையையும், மொட்டை மாடியையும் பொதுமக்கள் தூய்மையாக வைத்து கொள்ள வேண்டும். மழைநீர் கொண்டு வரும் குழாய்களில் அடைப்பு இருப்பின் அவற்றைச் சரிசெய்து பராமரிக்க வேண்டும்.

மழைநீரைச் சேகரிக்க ஒவ்வொரு வீட்டிலும் மழைநீர் சேமிப்புத் தொட்டி அமைக்க வேண்டும்.

மழைநீர் சேகரிப்புக்காக நேரடியாக கிணற்றிற்குள் விடப்படும் மழைநீரைப் பயன்படுத்துவதற்காக 1000 லிட்டர் நீருக்கு 4 கிராம் என்ற அளவில் பிளீச்சிங் பவுடர் கரைக்கப்பட்டு நீர்த்தேக்க தொட்டி, மேல்நிலைத் தொட்டிகளில் விட்டுச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

குடிநீருக்காக மழைநீரை உபயோகப்படுத்தும் போது, நுண்கிருமிகளை அழிக்க தண்ணீரை நன்றாகக் காய்ச்சி, வடிகட்டி பொதுமக்கள் குடிக்க வேண்டும்.

அனைத்து வீடுகளிலும் மழைநீர் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி, நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த வேண்டும் என்றார் அவர்.

கருத்தரங்கில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் பி.மந்திராசலம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் கே.விஸ்வநாதன் (கிருஷ்ணகிரி), இணை புவியியல் அமைப்பு நிபுணர் இளங்கோவன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பி.பெரியசாமி, ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் மலர்விழி, துணை இயக்குநர் (சுகாதாரம்) பி.பிரேம்குமார், மாவட்டத்திலுள்ள 333 கிராம ஊராட்சித் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரிக்கும் உபகரணங்கள் அளிப்பு**

பாரத ஸ்டேட் வங்கி சார்பில், ஏற்காட்டில் மலைவாழ் மக்களுக்கு இயற்கை, மண்புழு உரம் தயாரிக்கும் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

விழாவுக்கு சென்னை ஸ்டேட் வங்கி பொது மேலாளர் கிருத்திவாசன் தலைமை வகித்தார். சேர்வராயன் மலைவாழ் மக்கள் மேம்பாட்டு திட்ட மேலாளர் ஜெயபிகாஷ், ஏற்காடு ஸ்டேட் வங்கி மேலாளர் மோகன், வட்ட மேலாளர் கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஏற்காடு ஸ்டேட் வங்கி, சேர்வராயன் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் சார்பில், இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில், வேப்பாடி, சொரக்காப்பட்டியைச் சேர்ந்த 20 மலைவாழ் விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரிக்க தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மேலும், இதுதொடர்பாக விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. முடிவில் மாரப்பன் நன்றி கூறினார்.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் குறைந்தது**

பினி அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படுவது குறைக்கப்பட்டதால், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு மேலும் குறைந்தது.

கர்நாடக மாநிலத்தில் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்த தொடர் மழையால், கபினி அணை நிரம்பியதையடுத்து, உபரி நீர் காவிரியில் திறந்துவிடப்பட்டது. இதனால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது.

இதையடுத்து, ஜூன் 25-ஆம் தேதி 15.51 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்கிழமை 44.78 அடியாக உயர்ந்தது.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் அணையின் நீர்மட்டம் 29.27 அடி உயர்ந்துள்ளது.

தற்போது கர்நாடக மாநிலத்தில் மழை குறைந்ததையடுத்து, கபினி அணையிலிருந்து திறந்துவிடப்படும் நீரின் அளவு திங்கள்கிழமை நொடிக்கு 33,419 கன அடியாகக் குறைக்கப்பட்டது.

இதனால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து செவ்வாய்க்கிழமை நொடிக்கு 18,327 கன அடியாகக் குறைந்தது. அணையின் நீர்மட்டம் 44.78 அடியாக இருந்தது.

அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 1000 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. நீர் இருப்பு 14.68 டி.எம்.சியாக உள்ளது.

மேட்டூர் அணை நீர்மட்டம் விரைவில் 90 அடியை எட்டிவிடும்; ஜூலைக்குள் காவிரி டெல்டா பாசனத்துக்கு அணையிலிருந்து தண்ணிர் திறக்கப்படும் என்று எதிர்பார்த்திருந்த விவசாயிகள் நீர்வரத்து குறைந்ததால் ஏமாற்றமடைந்துள்ளனர்.

பிலிகுண்டுலுவில் நீர்வரத்து 6,000 கன அடி: கர்நாடக மாநிலம், கபினி அணையில் திறந்துவிடப்படும் நீரின் அளவு குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து, தமிழக எல்லையான பிலிகுண்டுலுவில் செவ்வாய்க்கிழமை நீர்வரத்து நொடிக்கு 6,000 கன அடியாக இருந்தது.

ஒகேனக்கல்லில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கையடுத்து, அருவிகளில் குளிக்கவும், பரிசலில் சவாரி செல்லவும் மாவட்ட நிர்வாகம் தடை விதித்தது.

இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை காவிரியில் நீர்வரத்து குறைந்ததை அடுத்து, ஒகேனக்கல் அருவிகளில் கொட்டும் தண்ணீரின் வேகமும் குறைந்ததைத் தொடர்ந்து, சுற்றுலாப் பயணிகள் பிரதான அருவியில் மட்டும் குளிக்க மட்டும் அனுமதிக்கப்பட்டனர். ஆனால், பரிசலில் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 45.18 அடியாக இருந்தது.**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 45.18 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 9,085 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து நொடிக்கு 1,007 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**சர்வதேச விவசாய வர்த்தக கண்காட்சியில் பங்கேற்க விவசாயிகளுக்கு அழைப்பு**

கோவையில் உள்ள கொடிசியா தொழில்காட்சி வளாகத்தில் 13-வது சர்வதேச விவசாய வர்த்தக கண்காட்சி ஜூலை 11 முதல் 14-ம் தேதி வரை நடைபெறுகிறது.

இந்தக் கண்காட்சியில், விவசாயப் பணிகளை சுலபமாக்கும் இயந்திர வகைகள் மற்றும் உபகரணங்கள், மாதிரிப் பண்ணை, மண்ணில்லா விவசாயம், நவீன நீர்ப் பாசனக் கருவிகள், நவீன வேளாண் தொழில்நுட்பங்கள், உணவு தயாரிக்கும் இயந்திரங்கள் கோழி வளர்ப்புக்குத் தேவையான உணவு, மருந்து மற்றும் உபகரணங்கள், வீரிய ரக கால்நடைகள் உள்ளிட்டவை இடம் பெறுகின்றன.

கண்காட்சியில் பங்கேற்க விரும்பும் நாகை மாவட்ட விவசாயிகள், சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தை நேரடியாகத் தொடர்பு கொண்டு, இலவச நுழைவுச் சீட்டை பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு கோவை, அக்ரி இன்டெக்ஸ் 2013-ன் தலைவரை 0422-2222396, 2222397 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்" என சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் கு. சசிகலா தெரிவித்துள்ளார்.

**கால்நடை வளர்ப்பு பயிற்சியளிக்க திட்டம்**

காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையத்தில் முயல், ஆடு, மாடு மற்றும் நாட்டுக் கோழி வளர்ப்பு குறித்து பொதுமக்களுக்கு பயிற்சியளிக்க திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என்றார் நிலையத்தின் புதிய தலைவர் ஏ. சுரேஷ்.

காரைக்கால் மாதூரில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் காய்கறி பயிரிடும் பகுதி, நெல் விளைச்சல் செய்யும் பகுதி, கால்நடைகள் வளர்க்கும் பகுதிகளில் தலைவர் சுரேஷ் செவ்வாய்க்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

இதைத் தொடர்ந்து, செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

நிலையத்திற்கு சொந்தமான நிலம் 60 ஏக்கர் உள்ளது. இந்த இடம் முழுவதையும் பயனுள்ளதாக மாற்ற திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இங்கு தற்போது கத்தரி சாகுபடி மட்டும் நடைபெறுகிறது. எல்லா காய்கறிகளும் பயிர் செய்யப்படும். சொட்டுநீர் பாசனம் மூலம் பயிர் செய்ய இங்குள்ள 5 பம்புகளையும் சரி செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் கண்டறியும் நெல் ரகங்களை, இங்குள்ள பண்ணையில் பயிரிட்டு அதன் நன்மைகளை விவசாயிகளுக்கு விளக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். இங்கு விளைவிக்கப்படும் காய்கறிகள் மானிய விலையில் விற்கப்படும். காரைக்கால் நகரில் அழகிய கார்டன் அமைத்து பராமரிப்பை நிலையத்தாரே செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. கார்டன் அமைக்க விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இங்கு தற்போது முயல் மட்டும் வளர்ப்பு செய்யப்படுகிறது. கால்நடைகளான முயல், ஆடு, மாடு மற்றும் நாட்டுக் கோழி வளர்ப்பு செய்யவும், இதன் வளர்ப்பு மற்றும் வருமானம் ஈட்டும் முறைகள் குறித்து பொதுமக்களுக்கு பயிற்சி அளிக்கவும் விரிவான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

நிலையத்தின் முதல்வர் விஜயகுமார் ஆய்வின்போது உடனிருந்தார்.

**முள்ளங்கனாவிளையில் கால்நடை மருத்துவ முகாம்**

முள்ளங்கனாவிளை ஊராட்சியில் விலையில்லா ஆடு வழங்கும் திட்டத்தில் ஆட்டுக் குட்டிகளுக்கான 2ஆம் கட்ட கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது.

முள்ளங்கனாவிளை ஊராட்சி திப்பிரமலையில் நடைபெற்ற இந்த முகாமுக்கு ஊராட்சித் தலைவர் பிரபா தலைமை வகித்தார். வார்டு உறுப்பினர் சிலுவைராஜ் முன்னிலை வகித்தார்.

கிள்ளியூர் ஒன்றிய கால்நடை மருத்துவர் சஜயன் ஆட்டுக்குட்டிகளை பரிசோதித்து நோய் கண்டறியப்பட்டு சிகிச்சை அளித்தார். இதில் குடற்புழு நீக்கம், நோய் தாக்கத்துக்கான சிகிச்சை மற்றும் ஆட்டுக் கொல்லி நோய் உள்ளிட்ட நோய்க்கான தடுப்பூசிகள் போடப்பட்டன.

முகாமில் வார்டு உறுப்பினர் மலையப்பன், கால்நடை மருத்துவ உதவியாளர் மந்திரி, ராணி, பென்னட் உள்ளிட்ட விலையில்லா ஆடு திட்டத்தின் கீழ் உள்ள அனைத்து பயனாளிகளும் தன் ஆட்டுக்குட்டிகளுடன் பங்கேற்றனர்.

**103 பண்ணைக் குட்டைகள் அமைக்க நிர்வாக அனுமதி: ஆட்சியர்**

திருநெல்வேலி மாவட்டத்தில் 103 விவசாயிகளின் நிலங்களில் பண்ணைக் குட்டைகள் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் சி. சமயமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செவ்வாய்க்கிழமை அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களில் விருப்பமுள்ள தனிநபர் விவசாய நிலங்களில் ரூ.1.50 லட்சம் மதிப்பீட்டுக்கு மிகாமல் பண்ணை குட்டைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதன்படி 103 விவசாய நிலங்களில் பண்ணைக் குட்டைகள் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் 23 பணிகள் தொடங்கப்பட்டு, 4 பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

இப்பண்ணைக் குட்டைகளில் வீணாகும் மழைநீரையும், உபரியாகச் செல்லும் கால்வாய் நீரையும் தேக்கி வைத்து, தேவைப்படும் நேரத்தில் விவசாயத்துக்கு பயன்படுத்திக் கொள்ளலாம். அவ்வாறு தேக்கி வைக்கப்படும் நீரால் கிணறு மற்றும் நிலத்தடி நீர் மட்டம் உயர்வதோடு அருகிலுள்ள விவசாய நிலங்களும் செழிப்புடன் இருக்கும். மேலும் இப்பண்ணைக் குட்டைகளில் மீன் குஞ்சுகள் விட்டு வளர்த்து அதன் மூலமும் லாபம் ஈட்டலாம்.

இத்திட்டத்தின்கீழ் குறைந்தது 15 மீட்டருக்கு 15 மீட்டர் அளவுள்ள பண்ணைக் குட்டை அமைக்க, 25 மீட்டருக்கு 25 மீட்டர் இடம் இருக்க வேண்டும். 1.5 மீ ஆழம் வரை குட்டை அமைக்கப்படும். தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பயனாளிகளைக் கொண்டு இக்குட்டைகள் நல்ல முறையில் அமைத்துக் கொடுக்கப்படும்.

எனவே விருப்பமுள்ள விவசாயிகள் பண்ணைக் குட்டை அமைக்க இடம் தேர்வு செய்து இடத்துக்கான பத்திரம், 10 (1) அடங்கல், குடும்ப அட்டை நகல், சர்வே எண் மற்றும் வருவாய் கிராமத்தின் பெயர் ஆகியவற்றுடன் தொடர்புடைய வேளாண் உதவி இயக்குநர் அல்லது வட்டார வளர்ச்சி அலுவலரை தொடர்பு கொண்டு பயன்பெறலாம். இந்த ஆவணங்களுடன் ரூ.2 மதிப்புள்ள முத்திரைத்தாளில் தனது இசைவை பதிவு செய்து கொடுக்க வேண்டும். இது தொடர்பாக மேலும் விவரங்களுக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர், உதவி திட்ட அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம் என்றார் ஆட்சியர்.

**விவசாய சங்கங்களுடன் ஆலோசனை**

பட்ஜெட் தொடர்பாக விவசாய சங்கங்களுடன் கர்நாடக எதிர்க்கட்சித் தலைவர் எச்.டி.குமாரசாமி செவ்வாய்க்கிழமை ஆலோசனை நடத்தினார்.

கர்நாடக சட்டப்பேரவையில் ஜூலை இரண்டாம் வாரத்தில் பட்ஜெட் தாக்க செய்யப்பட உள்ளது.

இந்த நிலையில், பெங்களூரில் எதிர்க்கட்சித் தலைவர் குமாரசாமி பட்ஜெட் தொடர்பாக விவசாய சங்கங்களுடன் ஆலோசனை நடத்தினார்.

ஆலோசனைக் கூட்டத்தில், விவசாய சங்கங்களைச் சேர்ந்த பிரமுகர்கள் கோடிஹள்ளி சந்திரசேகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அவர்களிடம், விவசாயக் கடன், மின்சாரம், உரம், விதை, நீர்ப்பாசனத் திட்டங்கள் தொடர்பான விவரங்களை கேட்டறிந்தார். தொடர்ந்து, அடுத்த வாரம் முழுவதும் பல்வேறு துறைகளைச் சார்ந்த சங்க பிரதிநிதிகளுடன் குமாரசாமி ஆலோசனை நடத்தவுள்ளார். இதுதொடர்பான அறிக்கையை அரசிடம் அவர் தாக்கல் செய்ய முடிவு செய்துள்ளார்.

**இன்று மழை பெய்ய வாய்ப்பு**

தமிழகம் மற்றும் புதுவையில் புதன்கிழமை மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் சில இடங்களில் தற்போது மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் தமிழகம் மற்றும் புதுவையில் புதன்கிழமை ஆங்காங்கே மழையோ, இடியுடன்கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. செவ்வாய்க்கிழமை காலை நிலவரப்படி சின்னக்கல்லாறு (30 மி.மீ.), வால்பாறை (20 மி.மீ.), திருமயம் (10 மி.மீ.) ஆகிய பகுதிகளில் மழை பெய்துள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**03.07.2013**

## 103 விவசாயிகளின் நிலங்களில்பண்ணை குட்டைகள் வசதி

திருநெல்வேலி:நெல்லை மாவட்டத்தில் 103 விவசாயிகளின் நிலங்களில் பண்ணை குட்டைகள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் விருப்பமுள்ள தனி நபர் விவசாய நிலங்களில் 1.50 லட்சம் மதிப்பீட்டிற்கு மிகாமல் பண்ணை குட்டைகள் அமைக்கப்பட்டு வருகிறது. இதுவரை மாவட்டத்தில் 103 விவசாயிகளின் நிலங்களில் பண்ணை குட்டைகள் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 23 பணிகள் துவக்கப்பட்டு 4 பணிகள் நிறைவு பெற்றுள்ளது.பண்ணை குட்டைகள் அமைக்க விருப்பமுள்ள விவசாயிகள் உரிய ஆவணங்களுடன் வேளாண் உதவி இயக்குனர் அல்லது பி.டி.ஓ (கிராம பஞ்.,)வை தொடர்பு கொண்டு பயன் பெறலாம் என்று கலெக்டர் சமயமூர்த்தி தெரிவித்தார்.

## நபார்டு உழவர் மன்றம் துவக்க விழா

தூத்துக்குடி:ஓட்டப்பிடாரம் அருகே உள்ள முத்துகுமாரபுரம் கிராமத்தில் நபார்டு உழவர் மன்றம் துவக்க விழா மற்றும் விவசாயிகளுக்கு அடிப்படை பயிற்சி முகாம் நடந்தது. நிகழ்ச்சிக்கு தூத்துக்குடி மாவட்ட நபார்டு உதவி பொது மேலாளர் நடராஜன் தலைமை வகித்தார். முள்ளுர் பஞ்., தலைவர் தமிழ்செல்விராமசாமி, முத்துகுமாரபுரம் நபார்டு உழவர் மன்றம் தலைவர் லிங்கராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேடநத்தம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி செயலாளர் சேசுராஜ் வரவேற்று பேசினார். நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாவட்ட நபார்டு உதவி பொது மேலாளர் நடராஜன் குத்துவிளக்கு ஏற்றி வைத்து நபார்டு

உழவர் மன்றத்தை துவக்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது. தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளுக்கு வேளாண் உற்பத்தி செலவுகள் கூடிவிட்டன. விளை பொருட்களை சந்தை பயன்படுத்தும் போது சரியான விலை கிடைப்பதில்லை எனவே புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் மூலமாகமும், நவீன வேளாண் கருவிகளை கையாள்வது மூலமாகவும் உற்பத்தி திறனை கூட்ட முடியும் அவ்வாறு செய்வதற்கு விவசாயிகளிடையே கருத்தொற்றுமை அவசியம். அதேபோல நம் கிராமங்களில் அளப்பரிய வளங்கள் இன்னுமும் கவனிக்கப்படாமல் இருக்கின்றன. நிறைய உட்கட்டமைப்பு குறைபாடுகள் இருக்கின்றன. உயரிய தொழில்நுட்பங்களை கிராம மக்களிடம் கொண்டு சேர்க்கும் விரிவாக்க பணிகள் முடங்கி கிடைக்கின்றன. உழவர் மன்ற தலைவர்கள் மக்கள் பங்கேற்பு முறை மூலமாக இடர்பாடுகள் போன்றவைகளை கண்டறிந்து ஆவண செய்யலாம். இது போன்ற உழவர் மன்றம் அனைத்து கிராமங்களிலும் தொடங்கி விவசாயங்களுக்கு பொருளாதார முன்னேற்றம் பசுமை புரட்சியை உருவாக்க முடியும் இவ்வாறு அவர் பேசினார். நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி உதவி பொது மேலாளர் தாமோதரன், வெங்கடசலபுரம் நபார்டு உழவர் மன்றம் தலைவர் கனகராஜ், ஆதனூர் வீரபாண்டிய கட்டபொம்மன் நபார்டு உழவர் மன்றம் தலைவர் செல்வபொம்முதுரை, ஆதனூர் கிராமிய கலை குழு தலைவர் பிரகலாதன் உட்பட விவசாய்கள், மகளிர் சுயஉதவி குழுக்கள் கலந்து கொண்டனர். தூத்துக்குடி மாவட்ட நபார்டு உழவர் மன்ற ஒருங்கிணைப்பாளர் சண்முகமல்லுச்சாமி நன்றி கூறினார்.

## அணைகளின் நீர்மட்டம் குறைகிறது மழை பெய்யாததால் விவசாயிகள் கவலை

பழநி:கோடை மழை பெய்யாததால், பழநி வட்டாரத்திற்கு விவசாயபாசன நீர், குடிநீர் வழங்கும் அணைகளின் நீர்மட்டம் குறைந்து வருகிறது.
இந்தாண்டு பழநி மற்றும் சுற்றுவட்டாரத்தில் வறட்சி நிலவுகிறது.
இதன்காரணமாக, குளங்கள்,கால்வாய்களிலும்
தண்ணீர் இல்லை. நிலத்தடி நீர்மட்டமும் குறைந்துள்ளது. பாசனக் கிணறுகளும் வற்றியுள்ளது. பருவமழையை நம்பி, நெல், வாழை, கொய்யா நடவுப்பணிகளை

மேற்கொண்டுள்ள விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

அணைகளின் நேற்றைய நிலவரம்:

* பாலாறு பொருந்தலாறு அணையில் வினாடிக்கு 7 கன அடி குடிநீருக்காக வெளியேற்றப்படுகிறது. நீர்மட்டம் 22.08 அடி (மொத்த உயரம் 65 அடி).

* குதிரையாறு அணையில் 3 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. நீர்மட்டம் 24.28 அடி (மொத்த உயரம் 80 அடி).

* வரதமாநதி அணையில் 2 கன அடி குடிநீர் தேவைக்காக வெளியேற்ற படுகிறது. நீர்மட்டம் 23.28 அடி (மொத்த உயரம் 67 அடி).

* பரப்பலாறு அணையில் 3 கன அடி குடிநீர் தேவைக்காக வெளியேற்ற படுகிறது. நீர்மட்டம் 29.17 அடி (மொத்த உயரம் 90 அடி).

* நங்காஞ்சியாற்றின் நீர்மட்டம் 20.84 அடி (மொத்த உயரம் 40 அடி), குடகனாறு அணையின் நீர்மட்டம் 9.14 அடி (மொத்த உயரம் 27.4 அடி).

பொதுப்பணித்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில்,""கொடைக்கானலில் தொடர் மழை பெய்ந்தால் மட்டுமே வரதமாநதி அணைக்கு தண்ணீர் வர வாய்ப்புள்ளது. பாலாறு பொருந்தலாற்றில் இருந்து குடிநீர் தேவைக்காக தண்ணீர் திறந்து விடப்படுகிறது. தென்மேற்கு

பருவமழை பெய்ந்தால் மட்டுமே, மற்ற அணைகளின் நீர்மட்டம் உயரும்,'' என்றார்.

**வறட்சி நிவாரண நிதி விவசாயிகள் ஏமாற்றம்**

வத்தலக்குண்டு:வத்தலக்குண்டு பகுதியில் வறட்சி நிவாரணம், அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்காததால் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

பருவ மழை பொய்த்ததால் ஆறு, குளம், கண்மாய், அணைகள் வறண்டன. விவசாய நிலங்கள் தரிசாக உள்ளன. கால்

நடைகளும் தீவனம் இன்றி அவதிப்படுகின்றன. விவசாயம் பொய்த்ததால், விவசாயிகள் மாற்று வேலை தேடிச் சென்றனர்.

தமிழக அரசு அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கருக்கு 3 ஆயிரம் ரூபாய் வீதம் வறட்சி நிவாரணம் வழங்க உத்தரவிட்டது.

வி.ஏ.ஓ.,க்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகள் குறித்த விவரங்களை அரசுக்கு அனுப்பினர். இதில் கோம்பைப்பட்டி, மல்லணம்பட்டி கிராம வி.ஏ.ஓ., வாக இருந்தவர்கள் அனைத்து பகுதிகளையும் கணக்கில் கொள்ளவில்லை.
ரோட்டோரத்தில் இருந்த நிலங்களை
மட்டும் கணக்கெடுத்து அனுப்பி வைத்துள்ளதாக புகார் எழுந்தது.
இரு கிராமங்களிலும் நூற்றுக்கணக்கான விவசாயிகள் உள்ளனர். ஆனால் 18 பேருக்கு மட்டுமே வறட்சி நிவாரணம் வந்து உள்ளது. வத்தலக்குண்டு அளவில் மிக் குறைந்த அளவு நிவாரண நிதி
இங்குதான் வழங்கப்பட்டு உள்ளது.
ஒவ்வொரு விவசாயிக்கும் மிகக் குறைந்த பணம் தான் வந்துள்ளது. இதனால் நிவாரணம் பெற்ற விவசாயிகளும், மற்றவர்
களும் மீண்டும் கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர்.
மாவட்ட நிர்வாகம் வருவாய்த்துறையினரை மீண்டும் கணக்கெடுப்பு நடத்த உத்தரவிட
வேண்டும். நிவாரண நிதி அனைவருக்கும் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்து
உள்ளனர்.

**கடைமடை செல்ல தண்ணீர் திறப்பு அதிகரிப்பு**

கோபிசெட்டிபாளையம்: தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் கடைமடைக்கு தண்ணீர் செல்லும் வகையில், 300 கனஅடி தண்ணீர் அதிகரிக்கப்பட்டுள்ளது.
பவானிசாகர் அணையில் இருந்து தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு, ஜூன், 27ம் தேதி முதல் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. தடப்பள்ளி வாய்க்காலில், 400 கனஅடியும், அரக்கன்கோட்டை வாய்க்காலில், 200 கனஅடி தண்ணீரும் திறக்கப்பட்டது. வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்பட்டதை தொடர்ந்து நாற்று விடும் பணி, உழவு பணி தீவிரமாக நடக்கிறது.கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததை தொடர்ந்து பாசனப்பகுதிகள் வறண்டு கிடக்கிறது.

வாய்க்கால் வறண்டு கிடப்பதால் கடைமடைக்கு தண்ணீர் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. அதைத்தொடர்ந்து நேற்று முன்தினம் முதல் பவானிசாகர் அணையில் இருந்து தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு, 900 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தடப்பள்ளி வாய்க்காலில், 550 கனஅடியும், அரக்கன்கோட்டை வாய்க்காலில், 350 கனஅடியும் அதிகரிக்கப்பட்டுள்ளது.தடப்பள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்காலில் திருந்திய நெல் சாகுபடி செய்தால் அதிக மகசூல் பெறலாம், என வேளாண்மை அதிகாரி ஆசைதம்பி கூறினார்.மேலும், அவர் கூறியதாவது:கோபி வட்டாரத்தில் அதிக அளவில் திருந்திய நெல் சாகுபடி முறையில் விவசாயிகள் நெல் சாகுபடி செய்கின்றனர். இந்த முறையில் இளம் நாற்றை நடுவதால் சடுதியில் நிலை கொண்டு நன்கு வளர்கின்றது. வேர்களின் வளர்ச்சி அதிகமாகிறது.அதிக தூர் வெடிக்கின்றன. இலைகள் அறுவடை வரை பசுமையாக இருப்பதால் சூரிய ஒளிச்சேர்க்கை கடைசி வரை நன்றாக இருக்கிறது. ஏற்கனவே கிடைத்த மகசூலைவிட, இந்த முறை மூலம் கூடுதல் மகசூல் கிடைக்கிறது. தொழில் நுட்பத்தால் ஏக்கருக்கு குறைந்தது, 500 கிலோ கூடுதல் மகசூல் கிடைக்கிறது.இவ்வாறு அவர் கூறினார்.

**கால்நடைகளை தாக்கும் உண்ணி காய்ச்சல்விவசாயிகளுக்கு யூ.டி.ஆர்.சி., யோசனை**

ஈரோடு: கால்நடைகளுக்கு ஏற்படும் உண்ணி காய்ச்சலுக்கு, கால்நடை டாக்டர்களை அணுகி சிகிச்சை பெற, ஈரோடு கால்நடை மருத்துவ பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் உதவி பேராசிரியர்கள் கவிதா மற்றும் யசோதை வேண்டுகோள் விடுத்துள்ளனர்.இதுகுறித்து அவர்கள் கூறியதாவது: உண்ணி காய்ச்சல் நோய், உண்ணி கடியினால் பரவுகிறது. கால்நடைகளுக்கு காய்ச்சல், ரத்தமாக அல்லது கடுங்காபி நிறத்தில் சிறுநீர் கழிப்பது ஆகியவை உண்ணிக்காய்ச்சலுக்கான அறிகுறியாகும். உடனடி சிகிச்சை அளிக்காவிடில், கால்நடைகள் இறக்க நேரிடும்."பேபிசியா பைஜீமைனா' என்ற ஒரு செல் ஒட்டுண்ணிகள் ரத்த சிவப்பு அணுக்களை அழித்து மாடுகளுக்கு கேடு

விளைவிக்கும்.இதனால், கால்நடைகளுக்கு ரத்த சோகையும், காமாலையும் ஏற்படும். ரத்த அணுக்கள் அழிக்கப்படுவதால், உயிர்காற்று செல்கள் பெற முடியாத நிலையில், கால்நடைகளுக்கு இறப்பு ஏற்படுகிறது.இந்த நோய் கிருமிகளை, மாடுகளுக்கு பரப்புவது உண்ணிகளே. இந்த ஒரு செல் ஒட்டுண்ணிகள் மாட்டின் ரத்த அணுவுக்கு சென்று, நோயை ஏற்படுத்தும் முன், உண்ணிகளில் நீண்ட நாட்கள் வாழ்கின்றன. அவைகள் மாடுகளை கடிக்கும்போது, நோய் பரவுகிறது. ஆகவே உண்ணி ஒழிப்பே முக்கியமானதாகும்.இந்நோய் மாடுகளை தாக்குவதால், மாட்டின் தோல் தரம் பாதிக்கப்படுகிறது. கடித்து எரிச்சல் ஊட்டுவதால் நிம்மதியாக தீவனம் எடுக்க முடியாது. உடலை தேய்த்து கொள்வதால் காயம் ஏற்படுகின்றன.உண்ணியை ஒழிக்க உப்பு முழு கரைசலை மாட்டின் உடலில் தேய்த்து, வெயிலில் நிறுத்தினால், உண்ணிகள் சாகும். நச்சு மருந்து பயன்படுத்துவதால், பூட்டாக்ஸ் இரண்டு மில்லி, ஒரு லிட்டர் தண்ணீர் என்ற விதத்தில் கலந்து, தெளிப்பான் மூலம் தெளித்து உண்ணியை ஒழிக்கலாம்.இந்நோய் தாக்கிய கால்நடை வளர்ப்போர், அருகிலுள்ள கால்நடை மருத்துவரை அணுகி இந்நோய்க்கு, 24 மணி நேரத்துக்குள் சிகிச்சை அளித்து காப்பாற்ற முடியும், என்றனர்.

## ரூ.3.98 கோடியில் விரிவாக்கப்பணிகள்ஆவின் தீவன தொழிற்சாலையில் ஜரூர்

ஈரோடு: ஈரோடு ஆவின் தீவன தொழிற்சாலையில் விரிவாக்கம் செய்யும் பொருட்டு, 3.98 கோடி ரூபாயில் கட்டுமான பணிகள் ஜரூராக நடந்து வருகிறது. ஈரோடு, சென்னிமலை ரோட்டில், ஆவின் கால்நடைத் தீவன தொழிற்சாலை அமைந்துள்ளது. இத்தொழிற்சாலையில் மாதத்துக்கு, 3 ஆயிரம் டன் கால்நடை தீவனங்களை உற்பத்தி செய்கின்றனர். கால்நடை தீவனம், பால் வளத்தை பெருக்க கறவைக்கான தீவனம், கன்றுகளுக்கான தீவனங்கள் உற்பத்தி செய்யப்படுகிறது.

கோவை, சேலம், நாமக்கல், திருச்சி உள்ளிட்ட, 17 மாவட்டங்களில் உள்ள ஆவின் கூட்டுறவு சொசைட்டிகள் மூலம், பால் உற்பத்தியாளர்களுக்கு தீவனங்கள் விற்பனை செய்யப்படுகிறது. தற்போது வறட்சியால் பாதித்த டெல்டா

மாவட்டங்களுக்கு மானிய விலையில் தீவனம் வழங்கும் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழகத்தில் கால்நடை தீவனத்தின் தேவை அதிகரித்துள்ள நிலையில், ஈரோடு ஆவின் தீவன தொழிற்சாலையை விரிவாக்கம் செய்ய முடிவு செய்து, 3.98 கோடி ரூபாயில் தற்போது கட்டுமான பணிகள் நடந்து வருகிறது. 2,500 டன் மூலப்பொருட்கள், உற்பத்தி செய்த கால்நடை தீவனங்கள், 500 டன் வரையிலுமாக, 3,000 டன் தீவனங்களை இருப்பு வைக்கக்கூடிய மிகப்பெரிய குடோன்கள் கட்டும் பணி ஜரூராக நடந்து வருகிறது.தற்போது தினமும், 100 டன் தீவனம் உற்பத்தி செய்யும் இயந்திரம் பயன்பாட்டில் உள்ளன.கட்டுமான பணிகள் முடிந்ததும், நாளென்றுக்கு, 300 டன் தீவனத்தை உற்பத்தி செய்யும் வகையிலான இயந்திரங்கள் தருவிக்கப்படும். வெளிமாநிலத்தில் இருந்து அவசர தேவைக்கு தீவன இறக்குமதி செய்ய வேண்டிய இருக்காது, என அலுவலர்கள் தெரிவித்தனர்.

**விலை அதிகரிப்பால் விவசாயிகள் ஆர்வம்சின்னவெங்காயம் சாகுபடி பணி தீவிரம்**

சத்தியமங்கலம்: தமிழகத்தில் சின்ன வெங்காயத்தின் விலை தொடர்ந்து அதிகரித்து வருதால், வெங்காயத்தை பயிரிட அதிக விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

சத்தியமங்கலம் பகுதியில், கடந்த ஒரு மாதத்தில், உற்பத்தி குறைவால், ஒரு கிலோ சின்ன வெங்காயம், 12 ரூபாய்க்கு விற்பனையானது. எனவே, கர்நாடகாவில் இருந்து, வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டதால், உச்சத்தில் இருந்த வெங்காயத்தின் விலை சற்று குறைந்தது.இருப்பினும், தமிழக அளவில் வெங்காயத்தின் விலை இன்னும் உயர்வாகவே இருப்பதாலும், மழை சீசன் துவங்கி உள்ளதால் விலை அதிகரிக்கும் என்ற எண்ணமும் விவசாயிகளிடம் உள்ளது.இதனால், சத்தியமங்கலம் பகுதியில் உள்ள ஊடுபயிராக விளைவித்த வெங்காயத்தை, அதிகளவில் விவசாயிகள் தனிப்பயிராக பயிரிட்டுள்ளனர்.இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது:சத்தியமங்கலம் பகுதியில், மஞ்சள், புகையிலை பயிரோடு, ஊடுபயிராக வெங்காயம்

பயிரிடப்பட்டது. தற்போது வெங்காயத்தின் விலை உயர்ந்து கொண்டே வருவதால், வெங்காயத்தை தனிப்பயிராக விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். அறுவடைக்கு பின் சின்ன வெங்காயத்தின் விலை குறைந்தாலும், வெங்கா

## இலவம் பஞ்சு மூட்டைக்கு ரூ.400 விலை சரிவு :மெத்தை உற்பத்தியாளர்கள் கடும் அதிருப்தி

ஈரோடு: இலவம் பஞ்சுவின் விலை மூடைக்கு, 400 ரூபாய் வரையில் குறைந்ததால், கடந்தாண்டு இலவம் பஞ்சை வாங்கிக்குவித்த, குப்பிச்சிபாளையம் கிராமத்து மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.ஈரோடு மாவட்டம், பவானி யூனியன், பவானி - மேட்டூர் மெயின் ரோட்டில் குப்பிச்சிபாளையம் அமைந்துள்ளது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கும் இக்கிராமத்தில், இலவம் பஞ்சு மூலம் மெத்தை, தலையணை உற்பத்தி செய்யும் தொழிலை கடந்த, 40 ஆண்டுகளுக்கு மேலாக செய்து வருகின்றனர்.வீட்டுக்கு தேவையான மெத்தை, தலையணை, ஷோபா பில்லோ, லாரி, கார்களுக்கான சீட் பில்லோ, பள்ளி, கல்லூரி ஹாஸ்டல் மாணவர்களுக்கான, ஒருவர் மட்டும் படுக்கும் வசதியுடன் மெத்தைகள், மடித்து எடுத்து செல்லும் வகையிலான மெத்தைகள் என வகை, வகையாக தயாரித்து விற்பனை செய்கின்றனர். ஹாஸ்டல்கள் திறக்கப்பட்டு வியாபாரம் சூடுபிடிக்க துவங்கிய நிலையில், இலவம் பஞ்சு மூடைக்கு, 400 ரூபாய் வரை விலை குறைந்ததால், ஸ்டாக் வாங்கி வைத்தவர்களும் கடும் இழப்பு ஏற்பட்டுள்ளதாக, மெத்தை உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.இதுகுறித்து, குப்பிச்சிபாளையம் மெத்தை தலையணை உற்பத்தியாளர் சிவகாமி கூறியதாவது:

எங்கள் கிராமத்துக்கு பரம்பரை தொழிலே மெத்தை, தலையணை உற்பத்தி செய்வதாகும். பொள்ளாச்சி, வருசநாடு, பழனி, ஏற்காடு, சத்தியமங்கலம் மலைப்பகுதியில் உள்ள இலவம் பஞ்சு மரங்களில் இருந்து, காய்களை வாங்கி வருகின்றனர். காய்களை உடைத்து, பஞ்சு எடுத்து தரும், 30 பஞ்சு மில்கள் கிராமத்தில் உள்ளன.

தலையணை, மெத்தை, விதவிதமாக வாகனங்களுக்கான பில்லோ, குழந்தைகள் பில்லோக்கள் உற்பத்தி செய்கிறோம். தவிர, திருமண செட்டாக ஒரு மெத்தை

இரண்டு தலையணை, ஒரு மெத்தை விரிப்பு, தலையணை உறைகள் என செட்டாக உற்பத்தி செய்து விற்பனை செய்கிறோம்.தமிழகம் முழுவதுமாக காதிகிராப்ட், மெத்தை, ஷோபா விற்பனை கடைகள், சந்தைகளுக்கு விற்பனைக்கு வாங்கிச்செல்கின்றனர். மெயின் ரோட்டில் உள்ள கடைகளில் லாரி, கார்க்காரர்கள் வாங்குகின்றனர். ஜூன் முதல் ஆகஸ்ட் மாதம் வரையிலும் பள்ளி, கல்லூரி ஹாஸ்டல் பயன்பாட்டுக்கு பெற்றோர்கள் வாங்கிச்செல்கின்றனர்.தலையணைகள், 100 முதல், 250 ரூபாய் வரையிலும், மெத்தை, 2,500 முதல் திருமண செட், 6,000 ரூபாய் வரையிலும், கார், லாரி, ஷோபா பில்லோ, 150 முதல், 200 ரூபாய் வரையிலும், மெத்தை கவர், 280 முதல், 340 ரூபாய் வரையிலும், ஹாஸ்டல் மாணவர்களுக்கு, 1,000 முதல், 1.500 ரூபாய் வரையிலான மெத்தை விற்பனை செய்கிறோம்.கடந்தாண்டு மழையின்றி இலவம் பஞ்சு, 4 கிலோ மூடை, 1,000 ரூபாய் விற்கப்பட்டது. தேவை கருதி மொத்தமாக வாங்கி ஸ்டாக் வைத்த நிலையில், தற்போது மூட்டை, 600 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. வழக்கத்தை விட மெத்தைக்கு, 30 ரூபாய் மட்டுமே கூடுதலாக வைத்து விற்பனை செய்கிறோம்.குறைந்த விலையில் பஞ்சு வாங்கி பாதிப்பேர் மெத்தை தலையணையை குறைந்த விலையில் விற்பனை செய்வதால், விலையை உயர்த்த முடியாமல் இழப்பு ஏற்படுகிறது.இருப்பினும், பெங்களூரு, மைசூரு, கோவை போன்ற நகரங்களுக்கு கார்களில் செல்வோர், ரோட்டோரம் வைத்துள்ள எங்கள் கடைகளில் தலையணை உட்பட பொருட்களை வாங்கிச் செல்கின்றனர்.இந்த விற்பனை பிரதானமானதாகும். இங்கு பல வர்ணங்களில், புதிய டிசைன்களில் செய்வதால், வரவேற்பு உள்ளது, என்றார்.

## ரூ.60 லட்சம் மஞ்சள் சாகுபடிக்கு மானியம்விண்ணப்பிக்க விவசாயிகளுக்கு அழைப்பு

ஈரோடு: பவானியில் ஆயக்கட்டுகளுக்கு பாசனத்துக்காக நடப்பாண்டு தண்ணீர் திறப்பு துவங்கியுள்ள நிலையில், மஞ்சள் பயிரிடுவதை ஊக்குவிக்கும் பொருட்டு, தோட்டக்கலைத்துறையில் எக்டேர் ஒன்றுக்கு, 12,500 ரூபாய் மானியம் அறிவித்து, விவசாயிகளிடம் விண்ணப்பம் கோரியுள்ளனர்.ஈரோடு மாவட்டம் கீழ்பவானி,

தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, காலிங்கராயன் வாய்க்கால் பாசனம் மூலம் மூன்று லட்சம் ஏக்கரில் விவசாயம் மேற்கொள்கின்றனர். நெல், கரும்பு, மஞ்சள், வாழை, கடலை, எள் உள்ளிட்ட தானியங்கள் பயிரிடுகின்றனர்.தமிழகத்தில் மஞ்சள் உற்பத்தியில், ஈரோடு மாவட்டம் முதலிடத்தில் உள்ளன. கடந்த ஒன்றரை ஆண்டாக மழையின்றி வறட்சியால் ஒட்டுமொத்த விவசாயமும், மஞ்சள் விலையில் கடும் சரிவு ஏற்பட்டதால், மஞ்சள் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.

மழையின்றி, விலையும் குறைந்ததால் மஞ்சள் பயிரிடுவதை விவசாயிகள் தவிர்த்தனர். இந்நிலையில் நடப்பாண்டு தென்மேற்கு பருவமழை பெய்த்ததால், பவானி அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.

இதனை அடுத்து பழைய ஆயக்கட்டில் விவசாயம் மேற்கொள்வதற்காக, கடந்த வாரம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் மஞ்சள் பயிரிடுவதை ஊக்குவிக்கும் பொருட்டு, மாவட்டத்தில், 500 எக்டேரில், மஞ்சள் பயிரிட, 60 லட்சம் ரூபாய் மானியத்தை தோட்டக்கலைத்துறை

அறிவித்துள்ளது.தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் கூறியதாவது: ஈரோடு மாவட்டத்தில் மஞ்சள் பயிரிடுவதை ஊக்கப்படுத்தும் நோக்கில், நடப்பாண்டு விவசாயிக்கு ஒரு எக்டேருக்கு, 12,500 ரூபாய் மனியம் வழங்கப்படும். 10 ஆயிரம் ரூபாய் பணமாகவும், 2,500 ரூபாய்க்கு உரமும் வழங்கப்படும். இந்த மானியத்தை பெற, கிராம நிர்வாக அலுவலரிடம் சான்று, சிட்டா, வருவாய்த்துறை சேவை ஆவணம் (ஆர்.எஸ்.ஆர்.,) ஆகிய சான்றுகளை பெற்றுவந்து, மாவட்ட தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும். அதிகாரிகள் தேர்வு செய்யும், மஞ்சள் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படும். தவிர, மாற்று விவசாய திட்டத்தில், மா நடவு செய்ய, எக்டேர் ஒன்றுக்கு, 24 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படும். ஒரு எக்டேருக்கு, 400 மா செடிகளும், உரங்களும் மானியமாக வழங்கப்படும், என்றனர்.

**விவசாயிகளுக்கு வினியோகிக்க 2.50 லட்சம் நாற்றுகள் தயார்**

ஊட்டி : ஊட்டி தும்மனட்டி அரசு தோட்டக்கலை பண்ணையில், விவசாயிகளுக்கு வழங்க, 2.50 லட்சம் தேயி லை நாற்றுகள் தயார் நிலையில் உள்ளன.

ஊட்டி அருகே, 25 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள, தும்மனட்டி அரசு தோட்டக்கலை பண்ணையில், மாவட்ட விவசாயிகளுக்கு வழங்க, உருளைக் கிழங்கு, பீன்ஸ், கேரட் விதைகள், தேயிலை நாற்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஆண்டுதோறும் ஜனவரி மாதம், உருளைக் கிழங்கு விதைகளை பெற சாகுபடி துவங்கும்; கடந்தாண்டு மழை பெய்யாததால், கடந்த ஜனவரியில் இப்பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. சில நாட்களாக பெய்து வரும் மழையை தொடர்ந்து, விதை உருளைக் கிழங்கு சாகுபடி செய்யும் பணி துவங்கியுள்ளது.

பண்ணை மேலாளர் கருணாகரன் கூறியதாவது:

பண்ணையில், ஆண்டுக்கு 60 டன் காரட் விதை, 90 டன் உருளைக் கிழங்கு, ஒரு டன் காரட் விதைகள், தரமான முறையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. உருளைக் கிழங்கு விதை கிலோ 12.00 - 15.00 ரூபாய், பீன்ஸ் விதை ஒரு கிலோ 80 ரூபாய்-க்கு விற்கப்படுகிறது. தவிர, நீலகிரி மாவட்ட கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கும் வழங்கப்படுகிறது.

இந்தாண்டு பருவ மழை சிறப்பாக இருக்கும் என, எதிர்பார்க்கப்படுவதால், விவசாயிகள் மத்தியில் விதைகளை வாங்குவதில் ஆர்வம் அதிகரித்துள்ளது. தற்போது பண்ணையில், 2.50 லட்சம் தேயிலை நாற்றுகள் தயார் நிலையில் உள்ளன; ஒரு நாற்று 4.00 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதில், 1.75 ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. இவ்வாறு கருணாகரன் கூறினார்.

**பாரம்பரிய பயிர்களை பயிரிட விவசாயிகளிடம்...ஆர்வமில்லை! ஏட்டளவில் நின்று போன உழவர் பெருவிழா**

ஆர்.கே.பேட்டை:மாவட்டம் முழுவதும், வருவாய் கிராமங்களில் நடந்த உழவர் பெருவிழாவில், பாரம்பரிய பயிர்களை சாகுபடி செய்ய வலியுறுத்தப்பட்டது. ஆனால், அவற்றில் போதிய லாபம் கிடைப்பதில்லை என்பதால், விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டவில்லை.

உழவர்களுக்கு புதிய நுட்பங்களை விளக்கும் விதமாக, கடந்த ஏப்., 14 முதல், மே மாதம், 20ம் தேதி வரை, உழவர் பெருவிழா கொண்டாடப்பட்டது. மாவட்டத்தில்

உள்ள, 705 வருவாய் கிராமங்களில், ஒரு நாள் முழுவதும் விவசாயிகளுடன், வேளாண் துறை சார்பில் விழா கொண்டாடப்பட்டது.

இதில், வேளாண் துறை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல் துறை, கால்நடை பராமரிப்பு, பால் வளம், மீன்வள துறையைச் சேர்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.

கையேடுகள்

விவசாயத்தில் நவீன வேளாண் கருவிகள் குறித்தும், பயிர் சுழற்சி முறை, விதை நேர்த்தி உள்ளிட்ட தகவல்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. விவசாயிகளுக்கு பாரம்பரிய பயிர் சாகுபடி குறித்த கையேடுகள் வழங்கப்பட்டன.

இதில், அந்தந்த பகுதிக்கு ஏற்ற பாரம்பரிய உணவுப் பயிர்களை பயிரிடுவது குறித்து விவசாயிகளுக்கு அதிகாரிகள் எடுத்துரைத்தனர்.

குறிப்பாக, ஆர்.கே.பேட்டை ஒன்றியம், பைவலசா கிராமத்தில் நடந்த விழாவில், தென்னை, பருத்தி, திணை, சாமை, சீயக்காய் உள்ளிட்டவற்றை பயிரிட ஆலோசனை வழங்கப்பட்டது. இதில், தென்னை பரவலாக அனைத்து பகுதிகளிலும் வளர்க்கப்படுகிறது.

திணை, சாமை உள்ளிட்டவற்றை இப்பகுதி விவசாயிகள் கேள்விப்பட்டது கூட கிடையாது. கோவை, ஈரோடு போன்ற பகுதிகளில் மட்டுமே விளையக்கூடிய பருத்தியை, இங்கு பயிரிட்டால் அதற்கான சந்தை வாய்ப்பு இருக்குமா என்பது விவசாயிகளின் சந்தேகம்.

ஏட்டளவில்...

கம்பு, சோளம், கேழ்வரகு மற்றும் பயறு வகைகள் உள்ளிட்ட பாரம்பரிய தானிய வகைகள் பயிரிடவும் பரிந்துரை செய்யப்பட்டது. ஆனால், விவசாயிகள் வழக்கம் போல் வேர்க்கடலை, நெல், கரும்பு, வாழை, சவுக்கு, மற்றும் காய்கறி, மலர் வகைகளை மட்டுமே பயிர் செய்கின்றனர்.

இதனால், 36 நாட்களாக கிராமம் கிராமமாக வேளாண் துறையினர் நடத்திய உழவர் பெருவிழா, ஏட்டளவில் நின்று போனது.

நடைமுறையில் விவசாயிகளால் பின்பற்றப்படவில்லை. நீர் வளம் நிறைந்த பகுதியில் தொடர்ந்து நெல், வாழை, கரும்பு உள்ளிட்டவையும், நீர் வளம் குறைந்த பகுதிகளில் மானாவாரி பயிராக, வேர்க்கடலை, சவுக்கு உள்ளிட்டவையும்

வளர்க்கப்படுகின்றன.

மேலும், குறைந்த பரப்பளவில், அதிக லாபம் தரும் காய்கறி மற்றும் மலர் ரகங்களை விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர். குறைந்த இடத்தில் பயிரிடுவதால் தண்ணீர் பாய்ச்சுவது குறைவு. மகசூல் செய்ய அதிகளவிலான கூலியாட்கள் தேவை இல்லை.

மல்லிகை, ரோஜா, முல்லை, கோழிக்கொண்டை, கனகாம்பரம் உள்ளிட்ட மலர் ரகங்களை பயிரிடுவதால், சீசன் நேரத்தில் தினசரி 1000 ரூபாய் வரை வருமானம் கிடைக்கிறது. இதனால், மாற்று பயிர் செய்வதற்கு விவசாயிகளிடையே ஆர்வம் இல்லை.

விலை கிடைப்பதில்லை

இது குறித்து, வேலன்கண்டிகையைச் சேர்ந்த விவசாயி ஒருவர் கூறுகையில்,

""கம்பு, சோளம் உள்ளிட்ட பயிர்களில், கதிர் விடும் பருவத்தில் இருந்து அறுவடை வரை, பறவைகளை விரட்ட ஆட்களை நியமிக்க வேண்டும்.

""இல்லாவிட்டால், தானியங்களை பறவைகள் கொத்திச் சென்றுவிடும். இவ்வளவு பாடுபட்டு மகசூல் செய்தாலும், அவற்றுக்கு அதிக விலை கிடைப்பதில்லை. எனவே பாரம்பரிய பயிர்களை பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டுவதில்லை,'' என்றார்.

இதுகுறித்து, பெயர் வெளியிட விரும்பாத வேளாண் துறை அலுவலர் ஒருவர் கூறுகையில், ""மாற்று பயிர்கள் செய்வதற்கு விவசாயிகள் ஆர்வம் செலுத்துவதில்லை என்பது உண்மைதான். அவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில்தான், இத்தகைய விழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. நாளடைவில் அவர்கள் மாற்று பயிர்களுக்கு மாறுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது,'' என்றார்.

**மழையால் குறுவை சாகுபடி விவசாயிகள் மகிழ்ச்சி**

பொன்னேரி:ஒரே நாளில், 10 செ.மீ., மழை பெய்ததால், குறுவை சாகுபடி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

மீஞ்சூர் ஒன்றியத்தில், 18 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், குறுவை சாகுபடிக்காக,

விவசாயிகள், தங்களது விளை நிலங்களை உழுது தயார் படுத்தி நடவுப் பணிகளை மேற்கொண்டு வந்தனர். நிலத்தடி நீரை கொண்டு பயிர் செய்யும் சின்னகாவணம், தேவராஞ்சேரி, கம்மார்பாளையம், ஆலாடு, வெள்ளகுளம் பகுதிகளில் ஆழ்துளை மின்மோட்டார்களை பயன்படுத்தி, விளை நிலங்களுக்கு நீர்பாய்ச்சப்பட்டது. உவர்ப்பு நீராக உள்ள தேவம்பட்டு, கோளூர், வஞ்சிவாக்கம் உள்ளிட்டவை மழை நீரை நம்பி விவசாயம் பார்க்கும் கிராமங்கள். இங்கு நடவுப் பணிகள் முடிந்து, விளை நிலங்கள் மழைக்காக காத்துக் கிடந்தன.

இந்நிலையில், இரு தினங்களுக்கு முன்தினம், பொன்னேரி மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில், ஒரு மணி நேரம் தொடர்ந்து மழை பெய்தது. ஒரே நாளில், 10 செ.மீ., மழை பெய்ததால், காய்ந்து கிடந்த விளை நிலங்கள் மழைநீரில் புத்துயிர் பெற்றன. தற்போது, தேவம்பட்டு, மெதூர் ஆகிய இடங்களில் நெற்பயிர்கள் செழிப்புடன் காணப்படுகின்றன.

இது குறித்து, சின்னகாவணம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி தாரகராமன் கூறுகையில், ""குறுவை சாகுபடிக்கு தேவையான மழை நீர், உரிய நேரத்தில் பெய்திருப்பதால், எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது. மழைநீர் நெற்பயிர்களில் நேரடியாக ஊடுருவி விழுவதால், பூச்சி தாக்குதலில் இருந்து தப்பியுள்ளன'' என்றார்.

### பருவமழை பொய்த்ததால் கருகும் கரும்பு பயிர்கள்

சங்கராபுரம் : சங்கராபுரம் பகுதியில் விவசாய கிணறுகளில் நீர் மட்டம் குறைந்து கரும்பு பயிர்கள் காய்கின்றன.சங்கராபுரம் பகுதியில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. ஏரி பாசனம், ஆற்று பாசனத்தை விட கிணற்று பாசனத்தை பல விவசாயிகள் நம்பியுள்ளனர். சங்கராபுரம் பகுதியில் ஆயிரம் ஏக்கருக்கு மேல் கரும்பு பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் ஏரி, குளங்கள் போன்ற நீர் நிலைகள் வற்றியது. மழையை எதிர்பார்த்து சாகுபடி செய்த கரும்பு பயிர்கள் காய்கின்றன. இப்பகுதியில் 500 ஏக்கருக்கு மேல் பயிர் செய்த கரும்பு காய்ந்து கருகி வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**மேட்டூர் அணை நீர்வரத்து 18 ஆயிரம் கன அடியாக சரிவு**

மேட்டூர்:கர்நாடக அணைகளில் இருந்து, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து, நேற்று, 18,327 கன அடியாக குறைந்துள்ளது.கர்நாடகாவில், கடந்த, 24ம் தேதி நிரம்பிய கபினி அணையில் இருந்து, 35 ஆயிரம் கன அடி நீர், காவிரியில் திறந்து விடப்பட்டதால், மேட்டூர் அணை நீர்மட்டம், "மளமள'வென, அதிகரித்தது.இந்நிலையில், கபினி நீர்வரத்து, 5,000 கன அடியாக குறைந்ததால், இரு நாட்களாக, 2,000 கனஅடி உபரி நீர் மட்டுமே, காவிரியில் திறக்கப்பட்டது. இதனால், மேட்டூர் அணைக்கு, நீர் வரத்து சரிந்து வருகிறது. நேற்று முன்தினம் வினாடிக்கு, 33 ஆயிரத்து, 419 கன அடியாக இருந்த நீர் வரத்து, நேற்று, 18 ஆயிரத்து, 327 கன அடியாக சரிந்தது.நேற்று அணை நீர்மட்டம், 44.780 அடியாகவும், நீர்இருப்பு, 14.682 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. நீர்வரத்து சரிந்ததால், நேற்று அணை நீர்மட்டம், மூன்று அடியும், நீர் இருப்பு, 1.5 டி.எம்.சி.,யும் மட்டுமே அதிகரித்தது. எட்டு நாட்களில், மேட்டூர் அணை நீர்மட்டம், 30 அடியும், நீர் இருப்பு, 12 டி.எம்.சி.,யும் அதிகரித்துள்ளது. குடிநீருக்கு, 1,000 கனஅடி நீர், வெளியேற்றப்படுகிறது.

**கபினி உபரி நீர் வெளியேற்றம் 2,700 கனஅடியாக குறைப்பு**

மேட்டூர்: காவிரி நீர்பிடிப்பு பகுதியில் தென்மேற்கு பருவமழை தீவிரம் குறைந்தால், கபினி உபரி நீர்திறப்பு நேற்று வினாடிக்கு, 2,700 கனஅடியாக குறைக்கப்பட்டது. காவிரி நீர்பிடிப்பு பகுதியில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்ததால் கர்நாடகாவில் கபினி அணை கடந்த, 24ல் நிரம்பியது. அணையில் இருந்து இருநாட்களுக்கு முன், அதிகபட்சமாக வினாடிக்கு, 35,000 கனஅடி உபரி நீர் காவிரியில் திறக்கப்பட்டது.இந்த நீர் வந்துசேர்ந்ததால், 15 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று, 42.100 அடியாகவும், 3 டி.எம்.சி.,யாக இருந்த நீர் இருப்பு, 13 டி.எம்.சி.,யாகவும் அதிகரித்தது. ஒரு வாரத்தில் மேட்டூர் அணை நீர்மட்டம், 27 அடியும், நீர் இருப்பு, 10 டி.எம்.சி.,யும் அதிகரித்துள்ளது.அணைக்கு நேற்று வினாடிக்கு, 33,419 கனஅடி நீர்வந்து கொண்டிருந்தது. இந்நிலையில்,

கேரளா-கர்நாடகா எல்லையில் தென்மேற்கு பருவமழை தீவிரம் குறைந்ததால், கபினி அணை நீர்வரத்து நேற்று, 4,500 கனஅடியாக சரிந்தது. இதனால், கபினி உபரி நீர்திறப்பு நேற்று வினாடிக்கு, 2,700 கனஅடியாக குறைக்கப்பட்டது.கபினி உபரி நீர்திறப்பு குறைக்கப்பட்டதால் வரும் நாட்களில் மேட்டூர் அணை நீர்வரத்து சரியும் என்பதால், கடந்த சில நாட்களாக மளமளவென உயர்ந்த, மேட்டூர் அணை நீர்மட்டம் வரும் நாளில் மெல்ல உயரும் நிலை ஏற்பட்டுள்ளது.

## மேட்டூர் அணை நீர்வரத்து18,327 கனஅடியாக சரிவு

மேட்டூர்: காவிரி உபரி நீர்திறப்பு குறைந்ததால், நேற்று முன்தினம், 33,419 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து, நேற்று வினாடிக்கு, 18,327 கனஅடியாக குறைந்தது.கர்நாடகாவில் கடந்த, 24ம் தேதி நிரம்பிய கபினி அணையில் இருந்து உபரி நீர் மேட்டூர் அணைக்கு திறக்கப்பட்டது. இந்த நீர் தொடர்ச்சியாக மேட்டூர் அணைக்கு வந்தது. அதிகபட்சமாக வினாடிக்கு, 35,000 கனஅடி நீர் வந்ததால், மேட்டூர் அணை நீர்மட்டம் மளமளவென அதிகரித்தது.இந்நிலையில், கபினி நீர்வரத்து வினாடிக்கு, 5,000 கனஅடியாக குறைந்ததால், இருநாட்களாக வினாடிக்கு, 2,000 கனஅடி உபரி நீர் மட்டுமே காவிரியில் திறக்கப்பட்டது. இதனால், மேட்டூர் அணை நீர்வரத்து மளமளவென சரிந்து வருகிறது. நேற்று முன்தினம் வினாடிக்கு, 33,419 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று வினாடிக்கு, 18,327 கனஅடியாக சரிந்தது. நேற்று அணை நீர்மட்டம், 44.780 அடியாகவும், நீர்இருப்பு, 14.682 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. நீர்வரத்து சரிந்ததால் நேற்று அணை நீர்மட்டம், மூன்று அடியும், நீர் இருப்பு, 1.5 டி.எம்.சி.,யும் மட்டுமே அதிகரித்தது. எட்டு நாளில் மேட்டூர் அணை நீர்மட்டம், 30 அடியும், நீர் இருப்பு, 12 டி.எம்.சி.,யும் அதிகரித்துள்ளது. குடிநீருக்கு, 1,000 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது.

## 451 மூட்டை மஞ்சள் வரத்து: ரூ.19 லட்சத்துக்கு விற்பனை

ராசிபுரம்: ராசிபுரம் அடுத்த, நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் உள்ள மஞ்சள் மண்டியில், 451 மஞ்சள் மூட்டை

ஏலத்துக்கு கொண்டு வரப்பட்டது. அதில், விரலி ரகம் அதிக பட்சம் ஒரு மூட்டை, 8,899, குறைந்த பட்சம், 6,899 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை ரகம் அதிக பட்சம், 6,819, குறைந்த பட்சம், 7,219 ரூபாய்க்கும் விலை போனது.மேலும், பனங்காலி அதிக பட்சம், 13 ஆயிரத்து, 699, குறைந்த பட்சம், 8,699 ரூபாய்க்கு விற்பனையானது. நேற்று, ஒரே நாளில், 451 மூட்டைகள், 19 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

**வெண்டையில் வீரிய ரகம் தேர்வு செய்தால் லாபம்**

ராசிபுரம்: "வெண்டை சாகுபடி செய்யும் விவசாயிகள், ஒட்டு வீரிய ரகங்களை தேர்வு செய்து அதிக லாபம் பெறலாம்' என, ராசிபுரம் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் மோகன் விஜயகுமார் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை;ராசிபுரம் பகுதிகளில் பரவலாக பெய்து வரும் மழைநீரை பயன்படுத்தி, விவசாயிகள் வெண்டை சாகுபடி செய்து வருகின்றனர். வெண்டை சாகுபடி செய்யும் போது, கோ, 1, கோ, 2, கோ, 3, அர்கா அனாமிக்கா, யு.எஸ்., 7019 சக்தி, ராசி, 20, உள்ளிட்ட உயர் ரக ஒட்டு வீரிய ரகங்களை தேர்வு செய்ய வேண்டும்.ஒரு ஏக்கருக்கு, 7.5 கிலோ விதை போதுமானது. விதைக்கும் முன், ஒரு கிலோவுக்கு, நான்கு கிராம் கேப்டான் அல்லது இரண்டு கிராம் கார்பன்டசிம் கலந்து விதைக்க வேண்டும். விதைக்கு, 45க்கு 30 செ.மீ., இடைவெளி இருக்க வேண்டும். விதைக்கும் முன் தழை, மணி, சாம்பல் முறையே, 20, 50, 30 கிலோ வீதம் உரமிட வேண்டும்.நடவு செய்வதற்கு முன், இரண்டு கிலோ அசோஸ்பைரில்லம், இரண்டு கிலோ பாஸ்போபேக்டீரியா இரண்டையும், 20 கிலோ தொழு உரத்துடன் கலந்து இட வேண்டும். விதைத்த ஒரு மாதத்துக்குள், 20 கிலோ தலைச்சத்து இடவேண்டும். ஒரு சதவீதம் யூரியா கரைசலை, 20வது நாளில் இருந்து, பத்து நாட்கள் இடைவெளியில், மூன்று முறை தெளிக்க வேண்டும்.ஒரு லிட்டர் நீருக்கு, 17 கிராம் மூரியேட் ஆஃப் பொட்டாஷ் கலந்து, 30, 45, 60வது நாளில் தெளிக்க வேண்டும். ஹெக்டேருக்கு, ஆக்ஸிபுளோர்பென், 1.25 லிட்டர் தண்ணில் கலந்து தெளிக்க வேண்டும். வெண்டை விதைத்து, 30 நாளில், களை எடுக்க வேண்டும். காய்கள் பிடிக்க துவங்கும் போது, காய்துளைப்பான் தாக்குதலை கட்டுப்படுத்த,

இனக்கவர்ச்சி பொறிகள், 12 வைத்து தத்துப்பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். மஞ்சள் நரம்பு நோய் பரப்பும் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்த, மோனோகுரோட்டோபாஸ் லிட்டருக்கு, இரண்டு மில்லி கலந்து தெளிக்க வேண்டும். நோயின் அறிகுறி தென்பட்டவுடன், 25 கிலோ சல்பர் டஸ்ட் நீரில் கலந்து, 15 இடைவெளிவிட்டு தெளிக்க வேண்டும். வெண்டை சாகுபடி செய்துள்ள விவசாயிகள், மேற்குறிப்பிட்ட முறைகளை கையாண்டு அதிக மகசூல் பெற்று லாபம் பெறலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**அணைகளின் நீர்மட்டம் குறைகிறது மழை பெய்யாததால் விவசாயிகள் கவலை**

பழநி:கோடை மழை பெய்யாததால், பழநி வட்டாரத்திற்கு விவசாயபாசன நீர், குடிநீர் வழங்கும் அணைகளின் நீர்மட்டம் குறைந்து வருகிறது.
இந்தாண்டு பழநி மற்றும் சுற்றுவட்டாரத்தில் வறட்சி நிலவுகிறது.
இதன்காரணமாக, குளங்கள்,கால்வாய்களிலும்
தண்ணீர் இல்லை. நிலத்தடி நீர்மட்டமும் குறைந்துள்ளது. பாசனக் கிணறுகளும் வற்றியுள்ளது. பருவமழையை நம்பி, நெல், வாழை, கொய்யா நடவுப்பணிகளை மேற்கொண்டுள்ள விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.
அணைகளின் நேற்றைய நிலவரம்:
* பாலாறு பொருந்தலாறு அணையில் வினாடிக்கு 7 கன அடி குடிநீருக்காக வெளியேற்றப்படுகிறது. நீர்மட்டம் 22.08 அடி (மொத்த உயரம் 65 அடி).
* குதிரையாறு அணையில் 3 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. நீர்மட்டம் 24.28 அடி (மொத்த உயரம் 80 அடி).
* வரதமாநதி அணையில் 2 கன அடி குடிநீர் தேவைக்காக வெளியேற்ற படுகிறது. நீர்மட்டம் 23.28 அடி (மொத்த உயரம் 67 அடி).
* பரப்பலாறு அணையில் 3 கன அடி குடிநீர் தேவைக்காக வெளியேற்ற படுகிறது. நீர்மட்டம் 29.17 அடி (மொத்த உயரம் 90 அடி).
* நங்காஞ்சியாற்றின் நீர்மட்டம் 20.84 அடி (மொத்த உயரம் 40 அடி), குடகனாறு அணையின் நீர்மட்டம் 9.14 அடி (மொத்த உயரம் 27.4 அடி).
பொதுப்பணித்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில்,""கொடைக்கானலில் தொடர்

மழை பெய்ந்தால் மட்டுமே வரதமாநதி அணைக்கு தண்ணீர் வர வாய்ப்புள்ளது. பாலாறு பொருந்தலாற்றில் இருந்து குடிநீர் தேவைக்காக தண்ணீர் திறந்து விடப்படுகிறது. தென்மேற்கு
பருவமழை பெய்ந்தால் மட்டுமே, மற்ற அணைகளின் நீர்மட்டம் உயரும்," என்றார்.

**பசுந்தாள் உரங்கள்**

பசுந்தாள் உரங்களில் டெய்ன்சா (தக்கைப்பூண்டு), செஸ்பேனியா (சீமைஅகத்தி) இவைகளுக்கு சிறப்பான இடம் உண்டு. ஒரு ஏக்கரில் 25-30 கிலோ விதை விதைப்பதற்குத் தேவைப்படும். விதையை உடனே வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும். மணல் தரைநிலம், குறுமண் நிலம், களிமண் நிலம், வண்டல் நிலம் ஆகியவற்றிற்கும் செஸ் பேனியா ஏற்றது. தக்கைப் பூண்டு எனப்படும் டெய்ன்ச்சா வையும் பயன்படுத்தலாம். ஒரு ஏக்கருக்கு 15 முதல் 20 கிலோ வரை உபயோகிக்கலாம். குறிப்பாக களர், உவர் நிலத்தை சரிசெய்ய உகந்த பசுந்தாள் உரம் தக்கைப்பூண்டாகும். இது மிருதுவான தண்டினைப் பெற்றது. வறட்சியையும், நீர் தேக்கத்தையும் எதிர்த்து வளரக்கூடியது. ஒரு ஏக்கரில் 8000 கிலோ வரை பசுந்தாள் கொடுக்கக்கூடியது.
பஞ்சாப் மாநிலத்திலுள்ள லூதியானா என்ற ஊரில் செயல்படும் விவசாய பண்ணையில் நெல் வயலுக்கு செஸ்பேனியா இட்டு பலன் அடைகின்றது. பஞ்சாபின் நெல்லின் ஆரம்பக்கட்டத்தில் இயற்கை உரத்தையும் தூர் பிடிக்கும் கட்டத்தில் ரசாயன உரத்தையும் இட்டால் நல்ல பலன் கிடைக்கும். இதுபோன்ற குணம் தக்கைப்பூண்டிற்கும் உண்டு. நெல் பயிரில் பூஞ்சாள நோய் பரவுவதை தக்கைப் பூண்டு தடுத்துவிடும்.
பசுந்தாள் உரத்தில் சணப்பும் இடம்பெற்று விட்டது. நெல் பயிருக்கும் இது ஏற்றது. சணப்பு பயிர் தண்டு பாகம் கடினமாக இல்லாமல் மிருதுவாக இருப்பதால் மணல் நிலத்தில் மடக்கி உழுது மண்ணுடன் கலக்கும்போது தண்டு எளிதில் மக்கிவிடுகின்றது. ஒரு ஏக்கரில் 10,000 கிலோ தழை கிடைக்கும். இதை மடக்கி உழும்போது நிலத்திற்கு சுமார் 37 கிலோ தழைச்சத்து கிடைக்கின்றது. இது

நிலத்திற்கு 3 டன் மக்கிய தொழு உரம் இடுவதற்கு சமமாகும். பசுந்தாள் உரம் நெல் பயிருக்கு மட்டும்தான் என்று நினைக்கக் கூடாது.

புரட்டாசியில் மழை பெய்தால் மாமரங்கள் இடையில் தக்கைப்பூண்டு விதைத்து நன்கு வளர்ந்தவுடன் மடக்கி உழுதுவிடலாம். நெல் அறுவடை செய்த வயல்களில் பசுந்தாள் உரச்செடிகளை வளர்த்து அது வளர்ந்தபிறகு அவற்றை மடக்கி உழுதால் நிலத்தில் வளம், மண்ணின் வளம் அதிகரிக்கின்றது.

பசுந்தாள் உரத்தைப்பற்றி பேசும்போது அதை பூமியில் மடக்கி உழ இயந்திரங்கள் பற்றி கவனம் செலுத்த வேண்டும். இதன் அடிப்படை நோக்கம் யாதெனில் நிலத்தில் எட்டு அங்குல ஆழத்திற்கு மண் கட்டிகளை உடைத்து மண் துகள்களை மென்மையான முறையில் கொண்டுவர வேண்டுமென்பதே. இம்மாதிரி செய்வதால் நீர் கசிந்து வீணாவதை தடுத்து நிலத்தில் நீரைத்தேக்கி வைக்கலாம். இதனால் களைச்செடிகள் தோன்றாது. இதோடு அங்ககச்சத்து மண்ணில் கலந்து விடுகிறது. ஒரு ஏக்கரில் மாடுகள் கொண்டு நிலத்தை உழுது சேறாக்கு வதற்கு ரூ.2000 வரை ஆகலாம். மேலும் அதிகமாகக்கூட ஆகலாம். ஆனால் கருவிகள் கொண்டு செய்தால் மிகவும் குறைந்துவிடும். கருவிகள் செய்யும் பணி மிக சீராக இருப்பதுடன் பயிர் விளைச்சல் அதிகமாக இருக்கும். கருவிகள் என்று கூறும்போது ரோட்ட வேட்டர் பற்றி நாம் கவனம் செலுத்த வேண்டும். இக்கருவி பசுந்தாள் உரங்களை கடுவிரைவில் பசுந்தாள் உரத்தை மடக்கி உழுது விடுகிறது. செடிகள் அனைத்தும் உழப்பட்டு பூமியில் அமிழ்த்து விட்டு வயலில் நிலம் நாற்று நடுவதற்கு டேபிள்டாப் போல் சமப்படுத்தி விடும்.

பல விவசாயிகள் இந்தக் கருவியை உபயோகிக்க வாடகை கொடுத்து பயன் அடைகின்றனர். ரோட்ட வேட்டர் இருக்கும்போது களையெடுக்கும் கருவி, சமப்படுத்தும் கருவி போன்று தனித்தனியாக கருவிகள் வாங்க வேண்டாம்.

மழை வரவில்லையே- என்ன செய்வது?

இக்கட்டுரையைப் படிக்கும் விவசாயிகள் மழை பெய்யவில்லை என்று நினைக்கலாம். துணிவே துணை என்பதை மறக்கக்கூடாது. கண்டிப்பாக மழை பெய்யும் என்ற எண்ணத்தில் இருக்க வேண்டும். கிணற்றுப்பாசனம் மூலம் நெல் விவசாயம் செய்யும் விவசாயிகள் நெல் அறுவடை செய்த வயலில் பசுந்தாள்

உரங்களை இட்டு அது வளர்ந்தபிறகு அவற்றை மடக்கி உழுது பயன் அடையலாம்.

**சின்ன சின்ன செய்திகள்**

**குறுகியகால துவரை ரகங்கள் - சாகுபடி நுட்பங்கள்:** நிலத்தை நன்கு உழுது பகுதி பாத்திகள் அல்லது பரிந்துரை செய்யப்பட்ட பயிர் இடைவெளிக்கேற்ற சால்கள் அமைத்தல்.
**பருவம்**: மே மற்றும் செப்டம்பர் முதல்வாரம், ஜனவரி கடைசி வாரம் (விதைப்பு).
**ரகங்கள்:** கோ(ஆர்ஜி)7, வம்பன்3. விதை அளவு: 20 கிலோ/எக்டர்.
**விதைநேர்த்தி:** சூடோமோனாஸ் -10கிராம்/ கிலோ விதை. டிரைகோடெர்மா விரிடி-4 கிராம்/கிலோ விதை, ரைசோபியம் மற்றும் 60 கிராம்/கிலோ விதை. பாஸ்போ பாக்டீரியா (3 பாக்கெட்டுகள்)
**இடைவெளி:** 60 x 45 செ.மீ. நுண்ணூட்ட கலவை: 5 கிலோ/ எக்டர். உர நிர்வாகம்: தழை, மணி, சாம்பல் சத்து, கந்தகச்சத்து 20:50:25:10 (இறவை), 12.5 : 25:12.5:10 (மானாவாரி) கிலோ/ எக்டர்.
**களை நிர்வாகம்:** விதைத்த 3ம் நாள் பெண்டி மீத்தோலின் 2.5 லிட்டர்/எக்டர். அகன்ற இலைகள் உள்ள களைகளுக்கு இமாஜித்தா பையர் - 600 மில்லி/எக்டர், புல்வகைகளுக்கு - குயிசலோபாவ் ஈத்தைல் - 1000மிலி/எக்டர் கலந்து விதைத்த 15ம் நாள் ஈரப்பதமுள்ள மண்ணில் தெளிக்க வேண்டும்.
**பயிர் பாதுகாப்பு**: சாறு உறிஞ்சும் பூச்சிகள் - மீத்தைல் டெமட்டான் 25 இசி 500மிலி/எக்டர் அல்லது டைமீத்தோயேட் 30 இசி, 500மிலி/ எக்டர், 25 முதல் 40 நாட்களில் தெளிக்கவும். காய்துளைப்பான் (புள்ளிக்காய்ப்புழு) இன்டாக்ஸா கார்ப்-375 மிலி/எக்டர் பூக்கும் தருணத்தில் தெளிக்கவும்.
**விளைச்சல்:** 700-1000 கிலோ/ எக்டர். நாற்று நடவு முறைக்கு ஏற்ற ரகம்: கோ(ஆர்ஜி)7 (120-130 நாட்கள்). நாற்று நடவு: மே மாதம். (தகவல்: த.வே.ப.கழகம், உழவர் பெருவிழா கையேடு, 2013).
*** திருந்திய நெல் சாகுபடி:** இம்முறையில் குறைந்த விதை அளவு (ஏக்கருக்கு 3 கிலோ), இளவயது நாற்றுக்கள் (12-15 நாள்), அதிக இடைவெளி (25 x 25செ.மீ.)

கருவிமூலம் களை எடுத்தல், நீர் மறைய நீர் கட்டுதல், இலைவண்ண அட்டையைப் பயன் படுத்தி தழைச் சத்தை இடுதல் ஆகியவை முக்கிய நுட்பங்களாகும். இம்முறையில் 25 முதல் 50 சதவீதம் வரை கூடுதல் மகசூல் கிடைக்கிறது.

**நன்மைகள்:** குறைந்த சாகுபடி செலவு, ஏக்கருக்கு 1 சென்ட் நாற்றங்கால் போது மானது. களையைக் கட்டுப்படுத்த களைக்கருவி உபயோகிப்பதால் ஆள் செலவு குறைவு. களைக்கருவி உபயோகிப்பதால் பயிர் வளர்ச்சி அதிகமாகிறது. வயலில் நீரைத் தேக்கி வைக்க வேண்டிய அவசியமில்லை. பாசன நீர்த்தேவை 40-50 சதவீதம் குறைவு.

அதிக வேர் வளர்ச்சி, அதிக தூர்கள், அதிக கதிர்கள், அதிக மணிகள், அதிக தானிய, வைக்கோல் மகசூல், அதிக லாபம்.

*** திருந்திய நெல் சாகுபடி அட்டவணை (குறுகிய கால நெல் ரகங்கள்) - விதைத்தபின் மேற்கொள்ளப் பட வேண்டிய செயல்பாடுகள்:**

1வது நாள் - நாற்றங்கால் விதைப்பு

5வது நாள்- தொழு உரம்/ மக்கு உரம் இடுதல், 6-12வது நாள் - நடவு வயல் தயாரித்து சமப்படுத்துதல். 12வது நாள் - ஜிப்சம், யூரியா, சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ் இடுதல்

13வது நாள் - நுண்ணூட்டக்கலவை இடுதல்

14-16வது நாள் - கோனோ கருவியைக்கொண்டு முதல் களை எடுத்தல்

30-35வது நாள் - முதல் மேலுரமிடல்

40-45வது நாள் - கோனோ கருவியைக் கொண்டு 2வது களை எடுத்தல்

55-60வது நாள் - கோனோவீடர் கருவியைக்கொண்டு 3வது களை எடுத்தல்

70-75வது நாள் - 3வது மேலுரமிடுதல்

வினையியல் கதிர் முற்றும் பருவம் - அறுவடை.

-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

**நெற்பயிரை தாக்கும் பூச்சிகள்**

**இலைப்பேன்:** இப்பூச்சியானது இளம் வயதில் அதாவது நாற்றங் காலில் ஆரம்பமாகும். இப்பூச்சி வந்தபிறகு நாற்றங்கால் வெளிறிய மஞ்சள் நிறமாகி தீய்ந்ததுபோல் காணப்படும். இலைகள் நுனியிலிருந்து காய்ந்து சுருண்டுவிடும். நடவு வயலில் இலையில் சாம்பல் படர்ந்தது போல் காணப்படும். இப்பூச்சி வெப்பகாலங்களில் அதிகமாக காணப்படும்.

இப்பூச்சியை கட்டுப்படுத்த வேப்பங் கொட்டைச்சாறு 5 சதம் அல்லது வேப்பெண்ணெய் 3சதம் தெளிப்பதன் மூலம் இப்பூச்சியைக் கட்டுப்படுத்தலாம். பாஸ்போமிடான் 40 எஸ்.எஸ். 2.5 மிலி/லிட்டர் என்ற முறையில் தெளிப்பதன் மூலம் இப்பூச்சியைக் கட்டுப்படுத்தலாம்.

**பச்சை தத்துப்பூச்சி:** இப்பூச்சி யானது நடவுசெய்த இளம் பயிர் களையே பொதுவாக ஜூலை முதல் செப்டம்பர் வரை தாக்கும். தூர்கள் வளர்ச்சி குன்றி, பசுமை யிழந்து பழுப்பேறி நாளடைவில் காய்ந்துபோகும். மேலும் நெல்லில் துங்ரோ நச்சுயிரி நோய் (துங்ரோ வைரஸ் நோய்) இப்பூச்சிகளால் பரப்பப்படுகிறது.

இப்பூச்சியைக் கட்டுப்படுத்த வேப்பங்கொட்டை சாறு 6 சதம் அல்லது வேப்பெண்ணெய் 3 சதம் தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம். அசிபேட் 75 எஸ்.பி. 2 கிராம்/ லிட்டர் அல்லது தயோமீத்தாக்சம் 25 டபிள்யூ டிஜி 0.2 கிராம்/லிட்டர் என்ற விகிதத்தில் தெளிப்பதன் மூலம் இப்பூச்சியை கட்டுப்படுத்தலாம்.

**தண்டு துளைப்பான்:** இப்பூச்சியானது இரண்டு பருவங்களில் வருகின்றது. 1. இளம் பருவம் 2. பூ பூக்கும் பருவம். இளம் பருவத்தில் இப்பூச்சி தாக்கும் போது நடு குருத்து காய்ந்துவிடும். பிடித்து இழுத்தால் கையோடு வந்து விடும். பூ பூக்கும் பருவத்தில் தாக்கும்போது பூக்கள் வெள்ளையாக வெளியே வரும். இப்பூவை இழுத்தால் கையோடு வந்துவிடும். இப்பூச்சி யின் புழுக்கள் பயிரின் கீழேயுள்ள 2வது, 3வது கணுக்களில் புழு நுழைந்த துவாரம் காணப்படும். மேலும் இப்பூச்சியானது டிசம்பர், ஜனவரி மாதங்களில் அதிகமாக இருக்கும்.

ட்ரைக்கோகிரம்மா ஜப்பானிக்கம் முட்டை ஒட்டுண்ணியை நடவுசெய்த 30 மற்றும் 37ம் நாட்களில் ஏக்கருக்கும் 2 சிசி வீதம் வெளியிட்டு இப்பூச்சியை கட்டுப்படுத்தலாம். புரோபனால் 50 இசி 2 மிலி/ லிட்டர் அல்லது குயினால்பாஸ் 25 இசி 2 மிலி/லிட்டர் என்ற விகிதத்தில் தெளிப்பதன் மூலம் இப்பூச்சியை கட்டுப்படுத்தலாம்.

**இலைச்சுருட்டுப்புழு:** இப்புழுவானது இலைகளை நீளவாக்கில் சுருட்டிக் கொண்டு பச்சை நிறத்தில் காணப்படும். இப்புழு இலையின் பச்சையத்தைச் சுரண்டி உண்பதால் இலைகள் வெண்மையாக சருகுபோல் மாறும்.

முட்டை குவியல்களையும், கூண்டுப் புழுக்களையும் எடுத்து அழிக்க வேண்டும். டிரைக்கோகி ரம்மா கைலோனிஸ் முட்டை ஒட்டுண்ணியை நடவு செய்த 37, 44 மற்றும் 51வது நாட்களில் ஏக்கருக்கு 2 சிசி வீதம் வெளியிட்டு இப்பூச்சியைக் கட்டுப் படுத்தலாம். இப்பூச்சிக்கு எதிரி ரகமான திருச்சி-3 ரகத்தை பயிர் செய்யலாம். பாஸ்போ மிடான் 40 எஸ்.எல்.2 மிலி/ லிட்டர் அல்லது புரேபனோபாஸ் 50இசி 2 மிலி/லிட்டர் அல்லது குளோர்பைரிபாஸ் 20 இசி 2.5 மிலி/லிட்டர் என்ற விகிதத்தில் தெளிப்பதன் மூலம் இப்பூச்சியைக் கட்டுப்படுத்தலாம்.

**கதிர் நாவாய் பூச்சி:** இப்பூச்சியானது கதிர் பால்பிடிக்கும் தருணத்தில் சாற்றை உறிஞ்சுவதால் மணிகள் சுருங்கி, பழுப்பு நிறமாகிவிடும். இப்பூச்சி தாக்கிய மணிகளில் கரும்புள்ளிகள் காணப்படும்.

மேலும் இப்பூச்சி தாக்கிய வயல்களில் ஒரு விதமான துர்நாற்றம் வீசும். ஒரு கதிரை எடுத்துக்கொண்டால் அதில் உள்ள அனேக மணிகள் பதராகி காணப் படும். கார்பரில் 10 சத தூள் 10 கிலோ/ ஏக்கருக்கு அல்லது மாலத்தியான் 10 சத தூள் 10 கிலோ/ஏக்கருக்கு என்ற விகிதத்தில் தெளிப்பதன் மூலம் இப்பூச்சியைக் கட்டுப்படுத்தலாம்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**03.07.2013**

**உற்பத்தி செலவை கணக்கிட்டு நெல் விலை நிர்ணயிக்க வேண்டும்**

மன்னார்குடி, :

மத்திய அரசு அறிவித்த ஆதரவு விலை போதாது. உற்பத்தி செலவை கணக்கிட்டு நெல் நிர்ணயம் செய்ய வேண்டுமென திருவாரூர் மாவட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மத்திய அரசு ஆண்டுதோறும் விவசாய விலை பொருட்களுக்கு ஊக்கத் தொகை அறிவித்து வரு கிறது. இந்தாண்டு காரிப் பருவத்திற்கு நெல்லுக்கான ஊக்கத்தொகையாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ.60 உயர்த்தப்பட்டுள்ளது. முதல்ரக நெல்லுக்கு ரூ.65 உயர்த்தப்பட்டுள்ளது. இதன்மூலம் ஒரு குவிண் டால் ரூ.1,250லிருந்து ரூ.1,3 10 ஆக அதிகரித்துள்ளது.

காவிரி டெல்டாவின் கடைமடை பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் நெல் உற்பத்தியை தவிர மற்ற பணப்பயிர்களை சாகுபடி செய்ய முடிவதில்லை. அந்த வகையில் திருவாரூர் மாவட்டத்தில் சுமார் இரண்டரை லட்சம் ஹெக்டேர் உட்பட நாகை, தஞ்சை மாவட்டத்தையும் சேர்த்து ஆறரை லட்சம் ஹெக்டேரில் நெல் சாகுபடியில் மட்டுமே விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நெல் உற்பத்தி செலவு கடந்த 10 ஆண்டுகளில் கடுமையாக அதிகரித்துள்ளது. உர விலையை நிறுவனங்கள் நிர்ணயித்து கொள்ள மத்திய அரசு அனுமதியளித்ததன் விளைவாக உரங் கள் கடந்த 4 ஆண்டுகளில் 3 மடங்கு விலை அதிகரித்துவிட்டது. இதுதவிர வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை சீற்றங்களால் உற்பத்தியிழப்பு போன்ற பொருளா தரா நெருக்கடிகளையும் விவசாயிகள் சந்திக்க வேண்டியுள்ளது. எனவே உற்பத்தி செலவை கணக்கிட்டு மத்திய அரசு, நெல் விலையை நிர்ணயம் செய்ய வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுபற்றி அரிச்சந்திரபுரம் செல்வம் கூறியது, இயற்கையை எதிர்கொண்டு முதலீடு செய்து உணவு உற்பத்தி தொழிலில் ஈடுபடுகிறோம். விவசாய தொழிலாளர்களுக்கான சம்பளம் அதிகரித்துள்ளது. ஆண்களுக்கு ரூ.300 வரையிலும், பெண்களுக்கு ரூ.150 வரையிலும் ஊதியம் கொடுக்க வேண்டியுள்ளது. 50 கிலோ எடை கொண்ட டிஏபி மூட்டை ரூ.1,600, பொட்டாஷ் ரூ.340 என விலை உயர்ந்துள்ளது. காஸ் சிலிண்டர்கள் விலை உயர்வால் யூரியா விலையும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே உற்பத்தி செலவை கணக்கிட்டு நெல் விலையை நிர்ணயிக்க வேண்டும். கோதுமை போன்ற பயிர்களுக்கு கரிசனம் காட்டுகிற மத்திய அரசு, நெல் உற்பத்தியில் உள்ள சிரமங்களையும் கணக்கிட்டு நெல்லுக்கான விலையை நிர்ணயிக்க வேண்டும் என்றார்.

வடபாதிமங்கலம் விவசாயி சண்முகம் கூறியது, நிகழ்காலத் தில் மற்ற தொழில் கள் செய்கிறபோது கிடைக்கிற வருவாயைவிட நெல் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு கிடைக்கிற வருவாய் குறைவாக உள்ளது. இதனால் விவசாயத்தை விட்டு பல விவசாயிகள் வெளியேறுகின்றனர். வேறுதொழில் தெரியாதவர்கள் விரக்தியடைந்துள்ளனர். அதை ஆட்சியாளர்கள் உணர வேண்டும். நெல் விலையை குவிண் டால் ஒன்றுக்கு ரூ.2 ஆயிரம் என குறைந்தப்பட்ச விலையாக நிர்ணயித்து தரவேண்டும் என்றார்.

மத்திய அரசு அறிவித்த ஆதரவு விலை போதாது

விவசாயிகள் கோரிக்கை

ஏக்கருக்கு

பீ19,350

செலவு

ஒரு ஏக்கரில் நெல் சாகுபடி செய்ய ஆகும் செலவு விபரம் வருமாறு: முதலில் 3 முறை உழவு செய்து நிலத்தை பன்படுத்த ரூ.1,800, வரப்பு வெட்டுக்கூலி 2 நபருக்கு ரூ.900, விதை செலவு ஏக்கருக்கு 30 கிலோ ரூ.900, நாற்று விடும்போது அடி உரம் டிஏபி 10 கிலோ ரூ.350, விதை தெளிப்பு செலவு 4 பேருக்கு ரூ.1,000, அடுத்த 15 தினங்களில் யூரியா 12 கிலோ ரூ.200, நாற்று பறித்தல் செலவு ஏக்கர் ரூ.900, நடவு செலவு ஏக்கர் 16 பெண் தொழிலாளர்கள் ரூ.2500, நடவு செய்யும்

முன் உழவு செலவு ரூ.1,500, நடவின்போது கம்ளக்ஸ் உரம் செலவு ரூ.900, களை எடுத்தல் ஏக்கருக்கு 15 ஆட்களுக்கு ரூ.2,500. யூரியா, பொட்டாஷ் போன்றவற்றுக்கு ரூ.900, பூச்சி மருந்து செலவு ஏக்கருக்கு ரூ.2,000, அறுவடை செலவு இயந்திரம் மூலம் ரூ.3,000 என மொத்த செலவு ரூ.19,350 ஆகும்.
வடபாதிமங்கலம் விவசாயி சண்முகம் கூறியது, நிகழ்காலத் தில் மற்ற தொழில் கள் செய்கிறபோது கிடைக்கிற வருவாயைவிட நெல் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு கிடைக்கிற வருவாய் குறைவாக உள்ளது. இதனால் விவசாயத்தை விட்டு பல விவசாயிகள் வெளியேறுகின்றனர். வேறுதொழில் தெரியாதவர்கள் விரக்தியடைந்துள்ளனர். அதை ஆட்சியாளர்கள் உணர வேண்டும். நெல் விலையை குவிண் டால் ஒன்றுக்கு ரூ.2 ஆயிரம் என குறைந்தப்பட்ச விலையாக நிர்ணயித்து தரவேண்டும் என்றார்.
விவசாயிகள் சாத்த னூர் சுப்பிரமணியன், செந்தில், ஆதிவிடங்கன் சம்பந்தம் ஆகி யோர் கூறி யது, ஒரு ஏக்கரில் நெல் உற்பத்தி செய்ய ஆகின்ற செலவு சுமார் ரூ.20 ஆயிரமாகும். நேரடியாகவும் மறைமுகமாகவும் சாகுபடி துவங்கியதிலிருந்து அறுவடை செய்து முடிகிற வரை கண்காணிப்பு செய்கிறபோது ஏற்படுகிற செலவு மற்றும் சேதாரங்கள் உள்ளன. இவற்றை சமாளிக்க முடியாமல் தான் விவசாயிகளின் தற்கொலை அதிகரித்துள்ளது. இதை மத்திய அரசின் அறிக்கைகளே தெளிவுப்படுத்துகிறது. எனவே உற்பத்தி செலவு மற்றும் விவசாயிகளின் உழைப்புக்கேற்ற விலை நிர்ணயத்தை செய்தால் தான் நெல் உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்றார்.

**சின்னவெங்காயம் விலை சரிவு கம்பம் உழவர்சந்தையில் கிலோ ரூ.40க்கு விற்பனை**

கூடலூர்: கம்பம் உழவர்சந்தையில் சின்ன வெங்காயம் கிலோ ரூ.40க்கு விற்கப்படுகிறது.தமிழகத்தில் பருவமழை பொய்த்ததால் சின்னவெங்காயம் விளைச்சல் வெகுவாக பாதித்தது.அண்டை மாநிலங்களில் இருந்தும் வெங்காயம் வரத்து குறைந்தது. இதனால், சின்ன வெங்காயம் கிலோ ரூ.80 வரை விற்கப்பட்டது. இதனால், பொதுமக்கள் கடும் அவதிப்பட்டனர். கடந்த சில நாட்

களாக பருவமழை பெய்து வருகிறது. தேனி மாவட்டம் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்தும் சின்னவெங்காயம் வரத்து அதிகரித்துள்ளது. இதனால், சின்னவெங்காயம் விலை குறையத்துவங்கியுள்ளது.

நேற்று கம்பம் உழவர் சந்தையில் கிலோ ரூ 40க்கு விற்பனை செய்யப்பட்டது. கம்பம் உழவர்சந்தையில் நேற்று காய்கறிகளின் விலை நிலவரம் வருமாறு: (கிலோ ரூபாய் மதிப்பில்) சின்னவெங்காயம்-40, அவரைக்காய்-20, பச்சைமிளகாய் - 40, தக்காளி 34, பீன்ஸ் 46, கேரட்-39, இஞ்சி- 160, கத்தரி- 16, வெண்டைக்காய்-20, சீனி அவரை-24, சுரைக்காய்-12, பீட் ரூட்- 25, முள்ளங்கி, ரூக்கல்-20, முட்டைக்கோஸ்- 25, பல்லாரிவெங்காயம்- 26, சீனி அவரை- 16, முருங்கைகாய்-36, உருளைக்கிழங்கு- 22, சேனை- 26, பாகற்காய்-35 என விற்பனை செய்யப்பட்டது.

உழவர்சந்தை விவசாயிகள் கூறுகை யில், ‘‘விளைச்சல் குறைவால் கடந்த 3 மாதங்களாக காய்கறிகளின் விலை நாளுக்குநாள் அதிகரித்து வந்தது. தற்போது வரத்து அதிகரித்துள்ளதால் வெங்காயம், அவரை, பீன்ஸ் போன்ற காய்கறிகளின் விலை குறைந்து வருகிறது. என்றனர்.

**வறட்சி நிவாரணத்திற்கு விளை நிலங்கள் முறையாக தேர்வு செய்யவில்லை**

திருப்பூர்:  குண்டடம் நந்தவனம்பாளையம் பகுதியை சேர்ந்த விவசாயிகள் கலெக்டர் கோவிந்தராஜிடம் வழங்கிய மனுவில் கூறியுள்ளதாவது: நந்தவனம்பாளையம் கிராமத்திற்கு உட்பட்ட விவசாயிகளுக்கு கடந்த 15 நாட்களுக்கு முன் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டது. இதில், கிராம நிர்வாக அலுவலர் முறையாக சென்று ஆய்வு செய்து விவசாயிகளை தேர்வு செய்யவில்லை. மொத்தமாக ரூ.1500, ரூ.3,000 என்ற அளவில் குறைந்த அளவு விவசாயிகளுக்கு மட்டும் நிவாரணம் தொகை வழங்கியுள்ளனர்.

இதில் பாதிக்கப்பட்ட பெரும்பாலான தென்னை மற்றும் இதர பயிர் செய்திருந்த விவசாயிகளுக்கு எந்தவிதமான நிவாரணமும் கிடைக்கவில்லை.மேலும், பல விவசாயிகளின் பெயர்கள் வறட்சி நிவாரண உதவிப் பெறும் பட்டியலில் உள்ளதாக கூறி நந்தவனம்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு

வங்கியில் சேமிப்பு கணக்கு தொடங்கும்படி கூறினர். ரூ.250 செலுத்தி கணக்கு தொடங்கிய பின் விவசாயிகளுக்கு நிவாரணதொகை வரவில்லை என்று கூறிவிட்டனர். எனவே, பாதிக்கப்பட்ட விளைநிலங்களை மறு ஆய்வு செய்து வறட்சி நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.மேலும், முறையாக ஆய்வு செய்யாத வருவாய் அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியுள்ளனர்.

**வேளாண் சிறுதொழில் தொடங்க சிறு விவசாயிகளுக்கு மானியம் வணிக நட்பமைப்பு தகவல்**

கரூர், :

வேளாண் சிறுதொழில்களை தொடங்குவதற்கு சிறு விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது என்று வணிக நட்பமைப்பு தெரிவித்துள்ளது.

சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு தொடங்கப்பட்டுள்ளது. சிறு விவசாயிகள் இந்த நட்பமைப்பின் மூலமாக சிறுதொழில்கள் தொடங்கலாம். நட்பமைப்பில் என்னென்ன தொழில்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது, பொதுத்துறை, தனியார்துறை, கூட்டுறவு நிறுவனங்களை தேர்ந்தெடுத்து அறுவடை பின்செய்நேர்த்தி, பதனிடுதல், உற்பத்தி அலகுகளை மேம்படுத்த விவசாயிகளை ஒருங்கிணைத்து செயல்பட வைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

சோற்றுக்கற்றாழை சாறு தயாரித்தல் உள்ளிட்ட பல்வேறு மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யலாம். திட்ட அறிக்கையில் 10 சதவீதம், அல்லது திட்ட மதிப்பீட்டில் 26 சதவீதம் அல்லது அதிகபட்சம் ரூ.75 லட்சம் இவற்றில் எது மிக குறைவோ அந்த தொகையை மானியமாக பெறலாம்.

விவசாயம், விவசாயம் சார்ந்த தொழில் தோட்டக்கலை பூக்கள் அபிவிருத்தி, மூலிகைகள், மணம் தரும் தாவரங்கள், பட்டுப்பூச்சி வளர்த்தல், மீன்துறை போன்ற ஏதாவது ஒரு திட்டம் சார்ந்த முயற்சியாக இருக்க வேண்டும். திட்ட மதிப்பீடு ரூ.50 லட்சம் அல்லது அதற்கு மேல் இருக்கவேண்டும்.

விவசாயிகளை ஒருங்கிணைத்து நிறுவனம் ஏற்படுத்த, நிதி பங்கீடு அளிக்க

விவசாயிகள் தயாராகி வருவதாக சிறு விவசாயிகள் நட்டமைப்பு திட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

**சிவகங்கை மாவட்டத்தில் 266 மெட்ரிக் டன் நெல் இருப்பு**

சிவகங்கை: சிவகங்கை மாவட்டத்தில் 266 மெட்ரிக் டன் நெல் இருப்பு உள்ளதாக கலெக்டர் ராஜாராமன் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் கூறியதாவது: சிவகங்கை மாவட்டத்தில் தற்போது பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. மானாவாரி நிலங்களில் கோடை உழவு பணி நடந்து வருகிறது. தென்மேற்கு பருவத்தில் சராசரியாக 309.30மி.மீ மழை பெய்ய வேண்டும். ஜூன் மாதத்தில் மட்டும் 23.77மி.மீ மழை பெய்துள்ளது. ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களிலும் நல்ல மழை பெய்யும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. மழையை பயன்படுத்தி விவசாய பணிகளை மேற்கொள்ள விவசாயிகளும் தயார்நிலையில் உள்ளனர்.வேளாண்மை விரிவாக்க மையங்களில் நடப்பு ஆண்டு விதைப்புக்காக 266 மெட்ரிக் டன் விதை நெல் இருப்பு உள்ளது. தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் கிலோவுக்கு ரூ.5 மானியத்தில் நெல் வழங்கப்படுகிறது. பயறு வகைப் பயிர்களில் உளுந்து விதைகள் 6.8 மெட்ரிக் டன் இருப்பு உள்ளது. தேசிய உணவுப் பாதுகாப்பு திட்டத்தில் கிலோவுக்கு ரூ.12 மானியத்தில் உளுந்து வழங்கப்படுகிறது. எண்ணெய் வித்துப்பயிர்களில் கடலை விதை 20.5 மெட்ரிக் டன் இருப்பு உள்ளது. ஐசோபார்ம் எண்ணெய் வித்து திட்டத்தில் கிலோவுக்கு ரூ.12 மானியத்தில் கடலை விதை வழங்கப்படுகிறது.மேலும் நெல், உளுந்து, கடலை விதைகள் விதைக் கிராமத் திட்டத்தில் தேர்வு செய்யப்படும் கிராமங்களுக்கு ரூ.50 மானியத்தில் விதைகள் வழங்கப்படும். யூரியா 680 மெட்ரிக் டன், டிஏபி 210 மெட்ரிக் டன், பொட்டாஷ் 290 மெட்ரிக் டன், 20:20 காம்பளக்ஸ் 259 மெட்ரிக் டன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உரக்கடைகளில் இருப்பு உள்ளது. நெல்லுக்கு 850 லிட்டரும், பயறுக்கு 225 லிட்டரும் களைக் கொல்லி மருந்துகள் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மற்றும் தனியார் கடைகளில் இருப்பு

உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார். வேளாண்மை இணை இயக்குநர் செல்லத்துரை உடனிருந்தார்.

**வினாடிக்கு 38,000 கனஅடி வந்த நிலையில் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து சரிந்தது**



மேட்டூர்: கர்நாடகாவில் மழை குறைந்துவிட்டதால், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு விநாடிக்கு 18,327 கனஅடியாக குறைந்துள்ளது.கர்நாடகாவில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து பெய்து வந்த கனமழையால் கபினி, கிருஷ்ணராஜ சாகர் உள்ளிட்ட அணைகள் நிரம்பும் நிலையில் உள்ளன. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அணைக்கு வந்த உபரி நீர் காவிரியில் திறந்து விடப்பட்டது. இதனால், கடந்த ஒரு வாரமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகமாக இருந்தது. நீர் வரத்து விநாடிக்கு 38,547 கனஅடி வரை உயர்ந்தது. இதனால், மேட்டூர் அணை நீர்மட்டம் வேகமாக அதிகரிக்க தொடங்கியது. இந்நிலையில், தற்போது கர்நாடகாவில் மழை குறைந்துவிட்டதால் காவிரியில் திறக்கப்படும் நீரின் அளவும் குறைக்கப்பட்டுள்ளது.

இதனால், கடந்த 5 நாட்களாக அதிக அளவில் இருந்து வந்த நீர்வரத்து நேற்று முன்தினம் முதல் குறையத் தொடங்கியது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணைக்கு விநாடிக்கு 18,327 கனஅடி நீர் மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருந்தது. அணையின் நீர்மட்டம் 44.78 அடியாக இருந்தது. நேற்று முன்தினம் காலை 42.10 அடியாக இருந்த நீர்மட்டம் ஒரே நாளில் 2.68 அடி உயர்ந்துள்ளது. குடிநீர் தேவைக்காக விநாடிக்கு ஆயிரம் கனஅடி நீர் திறந்து

விடப்பட்டு வருகிறது. அணையில் 14.68 டிஎம்சி நீர் இருப்பு உள்ளது. நீர்வரத்து சரிந்துள்ளதால் விவசாயிகள், பொதுமக்கள் பெருத்த ஏமாற்றத்துக்கு ஆளாகியுள்ளனர். காவிரியில் தொடர்ந்து நீர்வரத்து அதிகமாக இருந்தால், ஜூலை முதல் வாரத்தில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படும் என எதிர்பார்ப்புடன் இருந்த விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

03.07.2013

**மழைநீரை சேகரித்து நிலத்தடி நீர்மட்டத்தை மேம்படுத்த வேண்டும் பொதுமக்களுக்கு குடிநீர் வடிகால் வாரிய அதிகாரி வேண்டுகோள்**

விழுப்புரம்,

மழைநீரை சேகரித்து நிலத்தடி நீர்மட்டத்தை மேம்படுத்த வேண்டும் என்று பொதுமக்களுக்கு குடிநீர் வடிகால் வாரிய அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கருத்தரங்கம்

விழுப்புரத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மழைநீர் சேகரிப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் குறித்து உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு கருத்தரங்கை நடத்தியது. இக்கருத்தரங்கை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேற்பார்வை பொறியாளர் அமல்ராஜ் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது:

பருவமழை தொடங்கப்பட உள்ளதால் மழைக்காலங்களில் கிடைக்க கூடிய மழைநீரை வீணாக்காமல் சேகரிக்க வேண்டும் என்பதற்காகவும், நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தவும் நீரின் தரத்தை மேம்படுத்தவும் தமிழக முதல்அமைச்சர் ஜெயலலிதா வின் ஆணைப்படி தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சி களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை புதியதாக உருவாக்கவும் மற்றும் ஏற்கனவே உள்ள கட்டமைப்பு களை புனரமைப்பு செய்து பராமரிக்கவும் பருவமழை

காலங்களில் பெய்யும் மழைநீரை சேகரித்து நிலத்தடி நீர்மட்டத்தை மேம்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

<u>மழைநீர் சேகரிப்பு</u>

அதன்படி விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் கட்டிட கூரைகளில் விழும் மழைநீர் சேகரித்தல், தரைமட்ட நீர் தொட்டிகளில் சேமித்தல், கசிவுநீர் குழிகள் மூலம் சேகரித்தல், கூழாங்கல் மற்றும் மணல் நிரப்பப்பட்ட படுகை, நீர் உட்கொள்ளும் உரை கிணறுகள், உபயோகப் படுத்தப்படும் கிணறுகள், சிறிய ஓடைகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுதல், நீர்வரத்து கால்வாய்கள் சரிசெய்தல், மழைநீர் சேகரிப்பு அனைத்து அரசு அலுவலக கட்டிடங்கள், பள்ளி கட்டிடங்கள், மருத்துவமனை கட்டிடங்கள் ஆகியவற்றில் செயல்படுத்தப்பட வேண் டும். மழைநீர் சேகரிப்பு திட்டங்களில் செயல்படுத்த தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை அரசுத் துறைகளில் இலவசமாக வழங்கிட வழிவகை செய்யப் பட்டுள்ளது. உள்ளாட்சி பிரதிநிதிகள் அவரவர் பகுதியில் தடுப்பணைகள் கட்டவும், ஏரி, குளங்கள் ஆகியவற்றை ஆழப்படுத்த முன்னுரிமை அளித்து மழைநீரை சேமிக்க வேண்டும்.

மேலும் பொதுமக்கள் தங்களது வீடுகளில் மழைநீர் சேகரிப்பு செய்ய பருவமழைக்கு முன்பு வீட்டு கூரையினையும், மொட்டை மாடியையும் மொட்டை மாடியில் உள்ள காய்ந்த இலைகள், சருகுகள் மற்றும் பறவைகளின் எச்சங் கள் ஆகியவற்றை மாடியில் இருந்து சுத்தப்படுத்த வேண்டும். மழைநீர் கொண்டு வரும் குழாய்களில் அடைப்பு அல்லது ஓட்டைகள் இருப்பின் அவற்றை சரிசெய்ய வேண்டும். இவ்வாறு அவர் பேசி னார்.

கருத்தரங்கில் உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) தினகர்சாம்சன் பாபு, குடிநீர் வடிகால் வாரிய பொறியாளர் கள் ஞானசேகரன், விஸ்வ நாதன், புவியியல் வல்லுனர் கோபாலகிருஷ்ணன் உள்பட ஊராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றியக்குழு தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள், நகராட்சி தலைவர்கள் கலந்துகொண்டனர்.

**விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வலியுறுத்தி நாடு தழுவிய வேலை நிறுத்த போராட்டம் நடத்தப்படும் அகில இந்திய விவசாயிகள் சங்க பொதுச்செயலாளர் தர்மபுரியில் பேட்டி**

தர்மபுரி,

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வலியுறுத்தி விரைவில் நாடு தழுவிய வேலை நிறுத்தப்போராட்டம் நடத்தப்படும் என்று அகில இந்திய விவசாயிகள் சங்க பொதுச்செயலாளர் கே.வரதராசன் தர்மபுரியில் கூறினார்.

<u>நிதியளிப்பு கூட்டம்</u>

அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் 33–வது அகில இந்திய மாநாட்டை முன்னிட்டு நிதியளிப்பு பேரவை கூட்டம் தர்மபுரி பெரியார் மன்றத்தில் நேற்று நடந்தது. இந்தகூட்டத்திற்கு வரவேற்புக்குழு தலைவர் இளம்பரிதி தலைமை தாங்கினார். சங்க மாநில துணை செயலாளர் ரவீந்திரன், டில்லிபாபு எம்.எல்.ஏ., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு மாவட்ட செயலாளர் மாரிமுத்து, அகில இந்திய விவசாயிகள் சங்க மாநில துணைத்தலைவர் ரவீந்திரன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் ஆறுமுகம், செயலாளர் மல்லையன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் அகில இந்திய விவசாயிகள் சங்க பொதுச்செயலாளர் கே.வரதராஜன் சிறப்புரையாற்றினார். இதனைத்தொடர்ந்து அவர் நிருபர்களிடம் கூறியதாவது:–

அகில இந்திய விவசாயிகள் சங்கத்தில் நாடு முழுவதும் 2 கோடியே 25 லட்சம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த சங்கத்தின் 33–வது தேசிய மாநாடு வருகிற 24–ந்தேதி முதல் 27–ந்தேதி வரை கடலூரில் நடக்கிறது.

இந்த மாநாட்டில் இந்தியா முழுவதும் இருந்து சுமார் 3 லட்சம் விவசாயிகள் பங்கேற்கிறார்கள். திரிபுரா மாநில முதல்–அமைச்சர் மாணிக்சர்க்கார் மாநாட்டில் பங்கேற்கிறார். நமது நாட்டில் விவசாயம் மிகவும் நலிவடைந்த தொழிலாக மாறி

வருகிறது. பெரும்பாலான விவசாயிகளுக்கு இடுபொருட்கள், உரம், கடனுதவி ஆகியவை உரிய நேரத்தில் கிடைப்பதில்லை. பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு காப்பீட்டுக்குரிய தொகை முறையாக வழங்கப்படுவதில்லை. விவசாயம் பாதித்தால் நிவாரண உதவிகளும் முறையாக கிடைப்பதில்லை.

விவசாயிகள் தற்கொலை

விவசாயம் சார்ந்த இத்தகைய பிரச்சினைகளால் நாடு முழுவதும் ஒரு நாளில் 50 விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். நாடுமுழுவதும் 43 சதவீத விவசாயிகள் விவசாயத்தொழிலை விட்டு வெளியேற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். விவசாயிகளின் நிலை பற்றி பிரதமருக்கு கடிதம் எழுதினால், விவசாயிகள் நகர்ப்புறத்தை நோக்கி செல்வது நல்லது என்ற கருத்தை தெரிவிக்கிறார். விவசாயத்தை பாதுகாக்க வேளாண் விஞ்ஞானி சாமிநாதன் தயாரித்து அளித்த அறிக்கையில், விவசாய இடுபொருட்கள், உரம், விதை, மின்சாரம் ஆகியவற்றை குறைந்த விலையில் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால் இந்த பரிந்துரைக்கு நேர் எதிராக மத்திய அரசின் நடவடிக்கைகள் உள்ளன. இடுபொருட்கள், உரங்களின் விலையேற்றம் விவசாயிகளை நஷ்டத்தில் தள்ளி தற்கொலை செய்து கொள்ளும் நிலையை ஏற்படுத்துகின்றன. இந்தியாவின் விவசாயத்தை ஏழை விவசாயிகளிடம் இருந்து பறித்து பன்னாட்டு நிறுவனங்களிடம் ஒப்படைப்பதற்கான முயற்சிகள் நடக்கிறது. இந்த பிரச்சினை தொடர்பாக கடலூரில் நடக்கும் தேசிய மாநாட்டில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட உள்ளன.

சுமுகதீர்வு காண வேண்டும்

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க நாட்டில் உள்ள அனைத்து விவசாய சங்கங்களையும் ஒருங்கிணைத்து அகில இந்திய அளவில் வேலைநிறுத்த போராட்டங்களை விரைவில் நடத்த உள்ளோம். விவசாயிகளின் போராட்டத்திற்கு

வியாபாரிகள் சங்கங்களும் ஆதரவு தெரிவித்து உள்ளன. இதனால் தொடர் கடையடைப்பு போராட்டங்களும் நடத்தப்பட உள்ளன. தமிழகம், கர்நாடகம், கேரளா ஆகிய மாநிலங்களுக்கு இடையே உள்ள நதிநீர் பங்கீடு பிரச்சினையில் மத்திய அரசு தலையிட்டு சுமுகதீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.